பக்தி

தொகுத்தவர்
ஸ்வாமினி ப்ரஹ்மலீநாநந்தா

பூஜ்யஶ்ரீ
ஸ்வாமி தயானந்த ஸரஸ்வதி

முன்னுரை

பூஜ்ய ஶ்ரீ ஸ்வாமி தயாநந்த ஸரஸ்வதி அவர்கள் ஸம்ப்ரதாய முறைப்படி வேதாந்தம் கற்பிக்கும் ஆசார்யர் ஆவார். அவர் அத்வைத வேதாந்தம், ஸம்ஸ்க்ருதம் இவற்றில் ஆழ்ந்த பாண்டித்யம் உடையவர். அத்துடன் அதனைப் பண்டிதர் முதல் பாமரர்வரை அனைவருமே நன்கு புரிந்துகொள்ளுமாறு விளக்கும் திறன் படைத்தவர். எந்த விஷயத்தை எடுத்துப் பேசினாலும், அவர் அதை அக்குவேறு ஆணிவேறாக அலசி, அதன் பொருள் இப்படித்தான் இருக்க முடியும், வேறுவிதமாக இருக்க முடியாது என்பதை மனதில் நன்கு பதியுமாறு விளக்கக்கூடியவர். வேதாந்தத்தை ஸம்ப்ரதாய முறையில் மக்கள் அறிய வேண்டும் என்பதற்காக ***ஆர்ஷ வித்யா*** *குருகுலங்களை நிறுவி குருகுல முறையில் பல சீடர்களைத் தயார் செய்துள்ளார். இன்று அவருடைய சீடர்களான ஸந்ந்யாஸிகளும், பிரஹ்மசாரிகளும் இந்நாட்டில் மட்டுமல்லாது வெளிநாடுகளிலும் கீதை, உபநிஷத் மற்ற வேதாந்த நூல்கள், ஸம்ஸ்க்ருதம் இவற்றைக் கற்பித்து வருகிறார்கள்.*

சேலம் மாநகரத்தில் பூஜ்யஶ்ரீ ஸ்வாமிகள் பக்தி என்ற தலைப்பில் ஆற்றிய தமிழ் சொற்பொழிவின் தொகுப்பு இது. இதில் அவர் நமக்கு பக்தி என்றால் என்ன, அதை வெளிப்படுத்தும் விதம், அதன் பலன்கள், பக்திக்கும் மனப்பக்குவத்திற்கும் உள்ள சம்பந்தம் இவற்றை அழகாக எடுத்துக் கூறியுள்ளார். கொடுத்தருளியவனை உணர்ந்து அனைத்தையும் அவன் சொத்தாகவும் அதற்கு நாம் டிரஸ்டி என்றும் பார்ப்பதே மனப்பக்குவம் என்பதை அழகாக விளக்கியுள்ளார். பக்தி இருந்தும் கெடுதல்தான் நடக்குகிறதே என்று புலம்புவர்களுக்கும் அழகாக பதில் கூறியுள்ளார்.

அத்துடன் பிரார்த்தனை பற்றி ஆங்கிலத்தில் அவர் கூறியுள்ள சில விஷயங்களின் தமிழாக்கமும் சேர்க்கப்பட்டுள்ளது. இதைப் படிப்பவர்கள் பக்திக்குப் பின் உள்ளது என்ன என்பதை நன்கு உணர்வார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

அவரிடம் குருகுல வாசம் செய்து முறையாகப் படிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது என் வாழ்நாளின் பெரும் பாக்யம். அத்துடன் இந்தச் சொற்பொழிவைக் கேட்டு, நான் பெற்ற பாக்யத்தை மற்றவர்களும் பெற வேண்டும் என்று இதனைத் தொகுத்து ***அவருடைய 75-வது பிறந்தநாளன்று*** *அவர் திருப்பாதங்களில் பக்தியும், நன்றியும் கலந்த காணிக்கையாக ஸமர்ப்பிக்கிறேன்.*

ஸ்வாமினி ப்ரஹ்மலீநாநந்தா

பக்தி

பக்தி என்ற சொல் ஒரு வடமொழி சொல். அந்தச் சொல்லானது '**ப**$_4$ஜ்' என்ற தாதுவிலிருந்து, அதாவது வினைச் சொல்லிலிருந்து வந்துள்ளது. '**தா**$_4$து' என்றால் ஒரு சொல்லுக்கு மூலமாக உள்ள பதம், வேர்ச்சொல். ஸம்ஸ்க்ருத மொழியில் தாதுவிலிருந்துதான் பலவிதமான சொற்கள் உண்டாகின்றன. உதாரணத்திற்கு, ஸம்ஸ்க்ருத இலக்கணப்படி 'க்ரு' என்ற வினைச் சொல்லிலிருந்து பலவிதமான சொற்கள் உண்டாகின்றன. அந்த தாதுவிலிருந்து வரும் சொற்களில் பல சொற்கள் நம் வழக்கத்தில் உள்ளன. உதாரணம் – கர்த்தா என்றால் செயல்படுபவன்; க்ரியா என்பது செயலையே குறிக்கும், கர்ம, கர்மபலன், கரணம், உபகரணம் இம்மாதிரி பல உள்ளன. வேர்ச்சொல்லிலிருந்து இம்மாதிரி பல சொற்கள் எப்படி உண்டாகின்றன என்பதைக் காட்டுவதற்கு வியாகரணம், இலக்கணம் என்பது உள்ளது. இது எல்லா மொழிகளிலும் உள்ளது என்றாலும், ஸம்ஸ்க்ருதத்தில் இது முழுமையாக வளர்ச்சி அடைந்துள்ளது. ஒரு சொல்லின் பொருளை நாம் அறிய வேண்டும் என்றால், அது எங்கிருந்து வந்துள்ளது, அதன் மூலமான தாது, வேர்ச்சொல் என்ன என்று காண வேண்டும். ஏனெனில், மூலச்சொல்லின் பொருளை ஒட்டித்தான் அந்தச் சொல் பொருள் பெறுகிறது.

ஆங்கிலத்தில் 'வாக்' என்ற வினைச் சொல்லிலிருந்து 'வாக்ஸ்,' 'வாக்கிங்க்,' 'வாக்கர்,' 'வாக்கபள்' போன்ற பல சொற்கள் உண்டாகியுள்ளன. தமிழிலும் 'நட' என்ற வினைச் சொல்லிலிருந்து நடக்கிறான், நடந்தான், நடப்பான், நடை, நடத்தை, நடப்பவன், நடக்கக்கூடிய போன்ற பல சொற்கள் உண்டாகியுள்ளன.

பக்தி என்ற சொல் '**ப**$_4$ஜ் ஸேவாயாம்' என்ற வினைச் சொல்லிலிருந்து உண்டாகியுள்ளது. ஸேவை என்ற சொல்லுக்கு பல அர்த்தங்கள் உள்ளன. சில விசேஷ பூஜைகள் பகவத்ஸேவை, பகவதிஸேவை என்று குறிப்பிடப்படுகின்றன. ஆதலால் இங்கு ஸேவை என்பதற்கு பூஜை என்று பொருள்.

பக்தி என்பது செயலா அல்லது பாவனையா?

நாம் சாதாரணமாக பக்தி செய்ய வேண்டும் என்று சொல்கிறோம். பக்தி என்பது ஒரு செயலா? அல்லது ஒரு பாவனையா? இது போன்றே பிரேமை, அன்பு என்ற சொற்களையும் நாம் பயன்படுத்துகிறோம். இவை செயலா அல்லது மனோபாவமா என்று பார்த்தால் இவை மனோபாவம்தான். ஆனாலும் அந்த பாவனையானது கண்களிலும், முகத்திலும், செயல்களிலும் வ்யக்தமாகிறது, அதாவது வெளிப்படுகிறது. குரோதம், கோபம் என்கிறோம். ஒருவனுடைய கோப மனோபாவமானது கண்களிலும், முகபாவத்திலும் வெளிப்படுகிறது. அவ்வாறே வார்த்தைகளிலும், செயல்களிலும் வெளிப்படுகிறது. திருஷ்டி வைத்துவிட்டார்கள், கண் பட்டுவிட்டது என்று சொல்வார்கள். கண்ணால் ஒருவர் நம்மைப் பார்ப்பதால் நமக்கு எதுவும் ஏற்படப்போவதில்லை. ஆனால், ஒருவர் நம்மை பொறாமை அல்லது வெறுப்பு உணர்வோடு பார்க்கும்போது, அதாவது அவருடைய பொறாமை அல்லது வெறுப்பு என்ற மனோபோவம் அவர் பார்வையில் வெளிப்படும்போது, நமக்கு ஏதாவது ஏற்பட்டு விடுமோ என்று நாம் பயப்படுகிறோம். இதைத்தான் த்ருஷ்டி. அல்லது கண்படல் என்பார்கள். ஆங்கிலத்திலும் திருஷ்டி என்பதற்கு சமமான வார்த்தைகள் இருப்பது அவர்களும் அதை நம்புவதைக் காட்டுகிறது. இவ்வாறு பக்தி, அன்பு, பிரேமை, பொறாமை, கோபம் என்ற சொற்கள் மனோபாவத்தை, உணர்வைக் காட்டும் சொற்கள். இவை நம் பார்வை, சொற்கள், செயல்கள் இவற்றின்மூலம் வெளிப்படலாம்.

பக்தி செய்ய வேண்டும், பக்தி பண்ண வேண்டும் என்றால், மனோபாவத்தைப் பண்ண வேண்டும் என்று கூறுவது போலாகிறது. பக்தி என்ற மனோபாவத்தை அடைய வேண்டும் என்றால் சரி. இதில் பண்ணுவதற்கு என்ன இருக்கிறது?..... என்றால், பக்தியினால் செய்யக்கூடிய கார்யங்கள் எவ்வளவோ இருக்கின்றன. நம் அன்பை வெளிப்படுத்தும்படியாக நாம் எவ்வளவோ நல்ல கார்யங்கள் செய்கிறோமல்லவா? அது போன்று நம் பக்தியை வெளிப்படுத்தும் செயல்கள் உள்ளன. சில சமயங்களில் நாம் அன்பு இல்லாமலேயே பல கார்யங்கள் செய்யலாம்; அவை நல்ல கார்யங்களாக இருக்கலாம். அவற்றுக்கும் பலன் உண்டு என்றாலும், அன்பு, தயை, கருணை என்ற மனோபாவங்களோடு செய்யக்கூடிய – பிறருக்கு உதவுதல் போன்ற – கார்யங்கள் சிறப்பானவை.

இவ்வாறான உணர்வுகள் இல்லாவிடிலும், சில சமயங்களில் இவை நற்செயல்கள் என்ற ஒரே காரணத்திற்காகவே சிலர் இவ்வாறான செயல்களைச் செய்யலாம். அல்லது, அதற்குப்

பின்னணியில் வேறு ஏதாவது எதிர்பார்ப்புகள் இருக்கலாம். உதாரணத்திற்கு, அரசியல்வாதிகள் தம்முடைய தொகுதிகளில் பல நல்ல கார்யங்களைச் செய்கிறார்கள் – ஆனால் அது அவருடைய சொந்த பணத்தில் இல்லை, தொகுதிக்காக ஒதுக்கப்பட்ட பணத்தில். சில சமயங்களில் தன்னுடைய சொந்தப் பணத்தைச் செலவழித்தும் அவர்கள் செய்யலாம். ஆனால் அன்பினாலோ, கருணையாலோ அல்லது நம்முடைய மக்கள் நன்றாக இருக்க வேண்டும் என்ற பெரிய நல்ல எண்ணத்தினாலோ அவர்கள் அவற்றைச் செய்வதாகக் கூற முடியாது. 'நாளை நான் தேர்தலில் நிற்கும்போது இவர்கள் எனக்கு ஓட்டுப் போட வேண்டுமே' என்ற எதிர்பார்ப்புதான் அவர்களுடைய செயலுக்கு அடிப்படையாக உள்ளது. ஆயினும் அவருடைய கார்யம் நல்ல கார்யம்தான். அதில் நமக்கும் நன்மை உண்டு, அவருக்கும் பலன் உண்டு. அதனால் ஓட்டு போடலாமே, இதில் தப்பில்லை. இருந்தாலும் செய்யப்படுவது மிகுந்த அன்பினாலோ, கருணையாலோ என்று கூற முடியாது.

அவ்வாறே சில செயல்கள் பக்தியை வெளிப்படுத்துவன என்று கருதப்படுகின்றன. ஆயினும், அத்தகைய செயல்களின் அடிப்படையில் பக்திபாவம் இருக்கிறது, இருக்க வேண்டும் என்பதில்லை.

மனப்பக்குவத்தைப் பற்றிச் சில விஷயங்கள்

அதனால், பக்தி என்ற மனோபாவத்தை நாம் அடைய வேண்டும் என்றால். அதற்கு அடிப்படையாக நாம் சில விஷயங்களைப் புரிந்து கொள்ள வேண்டும். பக்தி என்பதும் மனப்பக்குவம் என்பதும் ஒன்றே என்று சொல்லலாம். மனப்பக்குவத்திற்கும், பக்திக்கும் சம்பந்தம் உள்ளது. மனப்பக்குவம் என்பது யாருக்கு ஏற்படுகிறதோ அவருக்கு சுயமாகவே இந்த பக்தி உணர்வு ஏற்படும். மனப்பக்குவம் ஏற்பட வேண்டும் என்றால் நாம் சில முக்கியமான விஷயங்களை சிந்தித்துப் பார்த்து அறிந்து கொள்ள வேண்டும்.

எது நமக்குச் சொந்தம்? – என்று சிந்தித்துப் பார்க்கலாம்

'இது என்னுடைய வீடு,' 'இது என்னுடைய பணம்,' 'இவர் என்னுடைய கணவன்/மனைவி,' 'இவர்கள் என்னுடைய குழந்தைகள்,' 'இது என்னுடைய கார்,' 'இது என்னுடைய நிலம்.' இவ்வாறு நாம் என்னவோ பல விஷயங்களை நமக்குச் சொந்தமானவை என்று நினைத்துக் கொண்டு இருக்கிறோம். இவை எல்லாவற்றிலுமே சிறிது உண்மை இருக்கிறது. சிறிதளவும் உண்மை

இல்லாமல் நாம் இவ்வாறு சொல்ல முடியாது. 'இது என்னுடைய வீடு' என்று ஒருவர் சொல்லும்போது அதை விற்பதிலோ, வாடகைக்குக் கொடுப்பதிலோ, அல்லது மற்றவருக்கு தானமாகக் கொடுப்பதிலோ அவருக்கு உரிமை இருக்கிறது; உலக விவகாரத்தில் இந்த வீடு 'என்னுடையது' என்று சொல்லக்கூடிய உரிமையும் இருக்கிறது. அம்மாதிரிதான் மற்ற பொருள்கள் விஷயத்திலும்.

ஆனால், 'இவர் என்னுடைய மனைவி' என்று சொல்லும்போது அது வேறு விஷயம். ஏனெனில் இது கார், வீடு போன்ற ஜடப்பொருள் பற்றியது அல்ல. சில மதங்களில், சில சமூகங்களில் மனைவியையும் பொருள் மாதிரி நினைக்கிறார்கள். ஆதலால் மனைவியைத் தள்ளி வைப்பது என்பது அவர்களுக்கு வெகு சுலபமாக இருக்கிறது. பொதுவாக 'இவர் என்னுடைய மனைவி' என்று ஒருவர் சொல்லும்போது மனைவியும் 'இவர் எனது கணவர்' என்று சொல்கிறார். நம்முடைய கலாசாரத்தில் விவாகம் என்ற புனிதச் சடங்கில் அக்னியையும், பெரியோர்களையும் சாக்ஷியாக வைத்துக் கொண்டு 'இன்று முதல் நாங்கள் இருவரும் பதி, பத்னியாக – கணவன் மனைவியாக ஆகிறோம்' என்று எல்லோர் முன்பும் அறிவிக்கிறார்கள். அதே மாதிரியே 'என்னுடைய குழந்தை' என்று சொல்லும்போது பெற்றோர் என்ற உரிமையுடன், அவர்களை நன்கு வளர்ப்பது, படிக்க வைப்பது போன்று பொறுப்பும் இருக்கிறது.

'எனக்குச் சொந்தம்' என்ற கூற்றைச் சிறிது சிந்தித்துப் பார்த்தால் வீடு, நிலம் போன்ற ஜடப் பொருள்களே நமக்கு முற்றிலும் சொந்தமில்லை, நம்முடைய உடைமைகள் அல்ல எனும் போது, மனிதர்கள் மட்டும் எப்படி நமக்குச் சொந்தம் ஆவார்கள்?

தேகமாவது என்னுடையதா?

பொதுவாக 'இது என்னுடைய தேகம்' என்று ஒருவர் சொல்லும்போது, அவருக்கு 'இது என் உடமை, இது எனக்கே எனக்குச் சொந்தம், இதில் மற்ற எவருக்கும் உரிமை இல்லை' என்ற எண்ணம் இருக்கிறது. 'இது என்னுடைய தேகம்' என்று கூறும் போது ஓரளவு உரிமை இருந்தாலும் அதில் நமக்கு முழு உரிமை இல்லை. இந்த உண்மையை எடுத்துக் காட்டும் ஸம்ஸ்க்ருத நாடகம் ஒன்று இருக்கிறது. அதில் இந்த தேகத்தைப் பற்றிப் பலர் உரிமை கொண்டாடுகிறார்கள். ஆதலால் இந்த கேஸ் கோர்ட்டுக்குப் போகிறது. அங்கு அது யாருக்குச் சொந்தம் என்பது தீர்மானிக்கப்படுகிறது.

அதில் இந்த மனிதர் கூறுகிறார், 'நான்தானே இந்த தேகத்தைப் பாதுகாக்கிறேன். இந்த தேகத்தின் சுகதுக்கங்களை நான்தானே அனுபவிக்கிறேன். ஆதலால் நானே இந்த தேகத்தின் உரிமையாளன்!'

அந்த நபருடைய தாயார் அதே கூண்டில் ஏறிக் கூறுகிறாள், 'இந்த தேகத்தை நான்தான் பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்தேன், வளர்த்தேன். 'புத்ரே புஷ்டே அஹம் புஷ்ட: புத்ரே நஷ்டே அஹம் நஷ்ட:' – புத்ரனுடைய தேகம் ஆரோக்யமாக, சந்தோஷமாக இருந்தால் நான் சந்தோஷமாக இருக்கிறேன். அந்த தேகத்திற்குக் கஷ்டம் ஏற்படும்போதெல்லாம் எனக்கும் கஷ்டம் ஏற்படுகிறது. ஆதலால் நான்தான் இந்த தேகத்திற்குச் சொந்தக்காரி! இதை யார் மறுக்க முடியும்?'

இப்பொழுது அந்த நபருக்கு சந்தேகம் வந்துவிட்டது. அதைக் கேட்டுக்கொண்டிருந்த நீதிபதிக்கும் சந்தேகம். இந்த கோர்ட்டு சீனை நாம் ஒரு கார்ட்டூனாகக் கற்பனை செய்து பார்ப்போம். அந்த நபர் பேசி முடித்தவுடன் நீதிபதியின் தலைமேல் ஒரு கேள்விக்குறி தோன்றுகிறது. அம்மா பேசி முடித்தவுடன் இரண்டாவது கேள்விக்குறி.

இப்பொழுது அவருடைய தந்தை கூண்டில் ஏறி, 'அவனுடைய அம்மா சொல்வது சரிதான். இருந்தாலும், இவன் உண்டாவதற்கு நானும் காரணமாக இருந்தேன். அவனுடைய வளர்ப்பிலும் நான் பங்கேற்றிருக்கிறேன். மேலும், நான் சம்பாதித்துக் கொண்டு வந்த பணத்தில்தானே அவனுடைய தாய் அவனை உணவூட்டி வளர்த்தாள். அதனால் எனக்கும் பாதி உரிமை உண்டு!' என்கிறார். இப்பொழுது நீதிபதியின் தலைமேல் மூன்றாவது கேள்விக்குறி தோன்றுகிறது.

அந்த நபருடைய மனைவி சொல்கிறார், 'இவர்கள் சொல்வதெல்லாம் சரி என்றாலும், அது அவருக்கு விவாகம் ஆகும்வரைதான். ஆனால், விவாகம் ஆன பிறகு நான் அவருடைய சரி பாதி ஆகிவிட்டேன். ஆங்கிலத்தில் பாதி என்று மட்டுமல்ல, 'பெட்டர் ஹாஃப்' என்றே கூறுகிறார்கள். சிவனையே பாருங்கள். அவர் தன் இட பாகத்தைப் பார்வதி தேவிக்குக் கொடுத்து அர்த்த நாரீச்வரராக இருக்கிறார். எங்கள் இருவர் நடுவிலும் ஸ்தூலமான இடைவெளி இருந்தாலும் நானும் அவருடைய பாதிதான். அவர் இல்லாமல் நான் எப்படிப் பூர்த்தி ஆவேன்? ஆதலால் அவர் எனக்குத்தான் சொந்தம்!' இப்பொழுது நான்காவது கேள்விக்குறி.

அவருடைய குழந்தைகளுக்காக ஒரு வக்கீல் வாதாட வருகிறார், 'இவர் குழந்தைகளுக்குத்தான் சொந்தம். இவருக்கு இந்தக்

குழந்தைகளை இந்த உலகத்திற்குக் கொண்டுவர எவ்விதமான உரிமையும் இல்லை. ஆனால் கொண்டு வந்த பிறகு அவர்களுக்குப் பதினெட்டு வயது ஆகும்வரை அவர்களைக் காக்கும் பொறுப்பு உண்டு. ஏனெனில் இவர்கள் மிருகக் குட்டிகள் அல்லர், இவர்கள் மனிதக் குழந்தைகள். அது மட்டுமல்ல அவர்கள் படித்துத் தங்களுடைய சொந்தக்காலிலேயே நிற்கும்வரை இவர்தான் அவர்களைக் கவனித்துக் கொள்ள வேண்டும். ஆதலால், இவர் அவர்களுக்கே சொந்தம்!' இப்பொழுது ஐந்தாவது கேள்விக்குறி.

அரசாங்க வக்கீல் கூறுகிறார், 'இந்த தேசத்துக் குடிமகன்களின் தேகங்கள் அனைத்தும் அரசாங்கத்திற்கே சொந்தம். அரசாங்கம் அவர்கள் ராணுவத்தில் சேர வேண்டும் என்றால், அவர்களுக்கு மறுக்க உரிமை இல்லை. மேலும் அவர்களுக்குத் தற்கொலை செய்து கொள்ளக்கூட உரிமை இல்லை. ஆதலால் இவருடைய உடல் தேசத்திற்குத்தான் சொந்தம்!' இப்பொழுது ஆறாவது கேள்விக்குறி.

இந்தக் கேள்விக்குறிகளைப் பார்த்தபின் அந்த நீதிபதிக்குத் தலை சுற்றுகிறது. இப்பொழுது அவருடைய மனதிலேயே மேலும் சில வாதங்கள் தோன்றுகின்றன.

'எரி எனக்கென்னும்' – நெருப்பு என்னைச் சேர்ந்தது என்று சொல்லும். இந்த மண்ணும் 'சரி எனக்கென்னும்' – ஏனென்றால் எரித்தாலும் சரி, புதைத்தாலும் சரி கடைசியில் மண்ணில்தானே எல்லோரும் சேர வேண்டும். நரி, பருந்து, நாய் புழு எல்லாமே 'இவன் என்னுடைய விருந்து அல்லவா?' என உரிமை கொண்டாடும். பிறகு அரிசி, கோதுமை, கத்தரிக்காய், பூஷணிக்காய், வெண்டைக்காய் எல்லாமே 'இவன் எனக்கான உரம்' என்று சொல்லும். பறப்பன, நடப்பன, நீந்துவன, ஊர்வன என்று எல்லாவற்றையும்தான் இவன் தின்கிறானே. ஆகையால் ஆடு, மாடு, கோழி, மீன் எல்லாமுமே சொந்தம் கொண்டாடும்!

பிறகு வயிற்றில் உள்ள அமீபாவும் சொந்தம் கொண்டாடும்; ஏனெனில் நம் நாட்டில் வயிற்றில் அமீபா இல்லாதவரே இல்லை எனலாம். இந்த அமீபாவானது நம் வயிற்றில் இருந்துகொண்டு ஒன்று இரண்டாக, இரண்டு நான்காக, நான்கு பதினாறாக, பதினாறு இருநூற்று ஐம்பத்தாறாக என்று பெருகும். அவை சொல்லும், 'நாங்கள் தலைமுறை, தலைமுறையாக இங்கு குடித்தனம் இருக்கிறோம். ஆதலால், இது எத்தனையோ தலைமுறையாக எங்கள் மூதாதையர் விட்டுச் சென்றுள்ள பாரம்பர்ய சொத்து. இதில் சொந்தம் கொண்டாட யாருக்கும் உரிமை இல்லை.'

தேகத்தின் உரிமை பற்றிய தீர்ப்பு

நீதிபதி யோசிக்கிறார், 'எல்லோர் சொல்வதும் சரியாகத்தான் தோன்றுகிறது, அதனால் இந்த உடல் எல்லோருக்குமே சொந்தம் என்று தோன்றுகிறது. யாருக்குக் கொடுத்தாலும் மற்றவர்களுக்கு அநியாயம் செய்வதாக ஆகிவிடும்.' அதனால் அவர் சொல்கிறார், 'இதை யாருக்குக் கொடுத்தாலும் தகராறு. இது மேலே இருக்கும் சர்க்காருக்கு அதாவது கடவுளுக்குத்தான் சொந்தம். ஆகையால் இந்த உடலை நான் ஓர் அறக்கட்டளையின் சொத்தாக ஆக்கப் போகிறேன். இந்த சொத்தின்மீது யாருக்கும் இனி தனி உரிமை கிடையாது. ஆனால் இதைப் பாதுகாத்துப் பராமரிக்க யாராவது ஒரு அறங்காவலர் வேண்டும். 'அம்மா, நீங்கள் பொறுப்பு ஏற்கிறீர்களா?' என்று அவருடைய தாயாரைக் கேட்கிறார். அந்த அம்மாவோ, 'என் தேகத்தை பராமரிக்கவே என்னால் முடியவில்லை. ஆதலால் இன்னொன்றின் பராமரிப்பை ஏற்க நான் தயாரில்லை' என்கிறார். அவ்வாறே அப்பாவும் தயாரில்லை. மனைவியும் தயாரில்லை.

நீதிபதி தன் மனதிற்குள்ளேயே அமீபாவிடம் கேட்கிறார், 'நீங்கள் பராமரிக்கும் பொறுப்பு ஏற்கிறீர்களா?' அவை சொல்கின்றன, 'இவர் தன் உடலைப் பாதுகாத்துப் பராமரித்தால்தானே நாங்கள் உயிர் வாழ முடியும்! இந்த உடலில் குடியிருப்பது மட்டுமே எங்கள் உரிமை. இதைப் பாதுகாப்பது எங்கள் பொறுப்பு இல்லை' என்கின்றன.

கடைசியில் நீதிபதி அந்த நபரையே கூப்பிட்டு, 'அப்பா! இதற்கு நிர்வாக அறங்காவலராக நீதான் இருக்க வேண்டும்' என்கிறார். அவன் 'முடியாது' என்று சொன்னாலும், 'நீதான் இருக்க வேண்டும். ஏனென்றால், இந்த உடலுக்கு எப்பொழுது பசி, தாகம் ஏற்படுகிறது, ஆதலால் எப்பொழுது சாப்பிட வேண்டும், எப்பொழுது முதுகு வலி ஏற்படுகிறது, எப்பொழுது டாக்டரிடம் போக வேண்டும் என்பதெல்லாம் உனக்குத்தான் தெரியும். ஆதலால் நீதான் இதற்குப் பொறுப்பு ஏற்றுப் பராமரிக்க வேண்டும். ஆனால்........... நீ உரிமையாளன் அல்ல, பொறுப்பாளி மட்டுமே' என்கிறார்.

இப்பொழுது இந்த நபருக்கு ஞானோதயம் ஏற்பட்டுவிட்டது. 'இந்த தேகமே எனக்குச் சொந்தம் இல்லை என்றால், பாக்கி எல்லாம் மட்டும் எப்படி எனக்குச் சொந்தமாகும்?'

எல்லாமே நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளன

இப்படிப்பட்ட பக்குவம் நமக்கு வந்துவிட்டால் நம் தேகத்தையே நாம் வேறுவிதமாகப் பார்க்கத் துவங்கி விடுவோம்.

'இந்த தேகமே நான்' என்று பார்ப்பதும், 'இது என்னுடையது. நான் இந்த தேகத்திற்கு உரிமையாளன்' என்று பார்ப்பதும் போய்விடும். அதாவது அஹங்காரமும் போய்விடும், மமகாரமும் போய்விடும். 'இது எனக்குக் கொடுக்கப்படுள்ள தேகம்' என்ற உணர்வு வந்து விடும். தேகமே கொடுக்கப்பட்டது என்றால், மனைவி கொடுக்கப் பட்டவர், கணவன் கொடுக்கப்பட்டவர், குழந்தைகள் கொடுக்கப் பட்டவர்கள், வீடுவாசல், நிலம் எல்லாமே கொடுக்கப்பட்டவை. அப்பொழுது 'இதில் நான், எனது என்று சொல்வதற்கு என்ன இருக்கிறது?' என்ற பக்குவம் வந்துவிடும்.

இந்தப் பக்குவம் வந்தவுடன் 'எல்லாமே எனக்குக் கொடுக்கப் பட்டவை என்றால், இவற்றைக் கொடுப்பவர் யார்? கொடுத்தவர், கொடுத்துக்கொண்டே இருப்பவர் யார்?' என்ற கேள்வி நம்முள் எழுகிறது. அறிவுள்ள எவருக்கும் இந்தக் கேள்வி எப்படி எழாமல் இருக்க முடியும்? இப்பொழுது இரண்டு உண்மைகள் – எல்லாமே கொடுக்கப்பட்டது என்ற உண்மையும், கொடுப்பவர் ஒருவர் இருக்க வேண்டும் என்ற பெரிய உண்மையும் – நமக்குத் தெளிவாகின்றன.

கண், காது, ஐம்புலன்கள் எல்லாமே நமக்குக் கொடுக்கப் பட்டுள்ளன. அவை அனைத்துமே ஒவ்வொன்றும் ஒவ்வொரு தனிப்பட்ட காரியத்தைச் செய்யக்கூடியதாகக் கொடுக்கப்பட்டுள்ளன. அவை கண்ணை மூடிக்கொண்டு, குருட்டாம் போக்கில் கொடுக்கப் படவில்லை; அறிவோடு கொடுக்கப் பட்டுள்ளன. ஆதலால்தான் கண்ணால் பார்க்க முடிகிறது. கொடுத்தவர் கண்ணை மூடிக் கொண்டு கொடுத்திருந்தால் நமக்குக் கண்ணே இல்லாமல் போயிருந்திருக்கும். ஆக, கொடுக்கப்பட்ட அனைத்துமே அறிவு பூர்வமாகத்தான் கொடுக்கப்பட்டுள்ளன!

கொடுப்பவர் ஒருவர் இன்றி இவை எவ்வாறு சாத்யம்?

கொடுக்கப்பட்டவற்றைப் பார்க்கும்போது கொடுப்பவர் ஒருவர் இருக்க வேண்டும் என்று ஊகிக்க முடிகிறது. இதை ஸம்ஸ்க்ருதத்தில் அர்த்தாபத்தி என்று சொல்வார்கள். கொடுப்பவர் ஒருவர் இல்லாமல் இவை இருப்பது சாத்தியமில்லை என்ற அறிவை ஊகத்தினால் பெற முடிவதால் இது அர்த்தாபத்தி எனப்படும்.

சுப்பு என்பவர் காலைமுதல் படுக்கும்வரை சாப்பிடுவதில்லை. இதை நாம் அவருடனேயே இருந்து பார்த்துக் கொண்டிருக்கிறோம். பத்து நாள், பதினைந்து நாள் தொடர்ந்து நாம் பார்த்து விட்டோம். அவர் பகலில் சாப்பிடுவதில்லை. இது ஓர் உண்மை. ஆனாலும் அவர் சிறிதும் இளைக்கவில்லை; அவருடைய எடை சிறிதும் குறைய

வில்லை. இது மற்றோர் உண்மை. இதிலிருந்து என்ன தெரிகிறது? சாப்பிட வேண்டியதை எல்லாம் அவர் இரவிலேயே சாப்பிட்டிருக்க வேண்டும். இல்லை என்றால், அவர் எடை குறையாமல் இருப்பது சாத்தியமில்லை என்று ஊகிக்கிறோம். இதுதான் அர்த்தாபத்தி.

தேகம் கொடுக்கப்பட்டுள்ளது என்பது தெரிகிறது. கண், காது, மூக்கு முதலியவை கொடுக்கப்பட்டுள்ளன என்பதும் தெரிகிறது. இந்த உலகமும் ஓர் ஒழுங்குடன் நியதிகளின் அடிப்படையில் இயங்குகிறது என்பதும் தெரிகிறது. *There is an order and design.* சூரியன் இப்பொழுது இருப்பதை விட கொஞ்சம் அருகிலோ அல்லது கொஞ்சம் விலகியோ இருந்தால் இந்த பூமியில் உயிர்கள் இருக்க முடியாது. விஞ்ஞானம் படிக்கப் படிக்க, இந்த உலகில் இயங்குகிற நியதிகள் நமக்குப் புரியப் புரிய, இந்தப் பிரபஞ்சமானது வேறு எந்த மாதிரியும் இருக்க முடியாது என்பது நமக்குத் தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது. இவற்றுக்கெல்லாம் அடிப்படையாக ஒரு மகத்தான அறிவு இருக்க வேண்டும் என்பதும் தெரிகிறது. அறிவை அடிப்படையாகக் கொண்ட இந்த தேகம், இது இருக்கும் இந்த பூமி, இதில் நமக்கு வேண்டிய காற்று, நீர், நெருப்பு, செடிகொடிகள், மேலே இருக்கும் சூரியன், சந்திரன் மற்றைய கிரகங்கள், பலவித சக்திகள் எல்லாமே கொடுக்கப்பட்டுள்ளன. ஆகையால் கொடுப்பவர் ஒருவர் இருந்தே ஆக வேண்டும்.

அம்மா பத்துநாள்களுக்கு ஊருக்குப் போகிறார். பத்து நாளுக்கு வேண்டியதைச் சமைத்து ஃப்ரிட்ஜில் வைத்துவிட்டு, வேலைக்காரியின் பொறுப்பில் பையனை விட்டுவிட்டுப் போய் விட்டார். பையன் தினமும் வேலைக்காரியின் உதவியுடன் அவ்வப்பொழுது வேண்டியதை ஃப்ரிட்ஜிலிருந்து எடுத்து சூடு பண்ணிச் சாப்பிடுகிறான். ஊரிலிருந்து திரும்பி வந்தபின் அம்மா கேட்கிறார், ‘என்னை மிஸ் பண்ணினாயா? நான் இல்லாமல் உனக்குக் கஷ்டமாக இருந்ததா?’ என்று. அவன் சொல்கிறான், ‘இல்லையே, பசிக்கும்போதெல்லாம் ஃப்ரிட்ஜைத் திறந்தால் சாப்பாடு கிடைத்ததே!’ என்கிறான். அம்மா ‘நான் திரும்பவும் ஊருக்குப் போகணுமே’ என்கிறார். அவன் ‘நோ ப்ராப்ளம், நீ இல்லாது போனாலும் கவலை இல்லை. ஃப்ரிட்ஜைத் திறந்தால்தான் சாப்பாடு கிடைக்குமே’ என்கிறான். எப்படிக் கிடைக்கும்? யாராவது செய்து வைக்காவிடில் ஃப்ரிட்ஜிலிருந்து எப்படி சாப்பாடு வரும்? இதை உணர்வதுதான் பக்குவம்.

பக்குவம் என்றால் அறிவு. பக்குவம் என்பது வயதின் முதிர்ச்சி அல்ல; அது அறிவின் முதிர்ச்சி. காயாக இருக்கும்வரை அது பக்குவம் அடையவில்லை என்கிறோம். பழுத்தபின் அது

பக்குவமடைந்து விட்டது என்கிறோம். அப்பொழுதுதான் அது பயன்படும். அவ்வாறு உண்மையான பக்குவம் என்பது மனிதனுக்கு அறிவினால், பகுத்தறிவினால்தான் ஏற்படுகிறது. இவ்வாறான பக்குவம் ஏற்படும்வரை ஒரு மனிதன் முதிர்ச்சி அடைந்ததாகச் சொல்ல முடியாது. இந்தப் பக்குவம் ஏற்பட்டால்தான் மனிதப் பிறவியே பயனுடையதாகும்.

ஆதலால், 'கொடுப்பவர் ஒருவர் இருக்கிறார்' என்ற மனப்பக்குவம் நமக்கு முதலில் ஏற்பட வேண்டும்.

இந்த உலகத்தில் 'கொடுப்பவர்கள்' என்று சொல்லக் கூடியவர்கள் பலர் இருக்கிறார்கள். ஆனால் 'இல்லை' என்று சொல்லாமல் கொடுப்பவர்கள் உலகத்தில் யாரும் இல்லை. ஃபோர்ட், பில் கேட்ஸ், டாடா, பிர்லா, அம்பானி, நாராயணமூர்த்தி இவ்வாறு எத்தனையோ மிகப் பெரிய கோடீச்வரர்கள் இருக்கிறார்கள். அவர்களிடம் அடிக்கடி யாராவது ஏதாவது நன்கொடை கேட்டுக் கொண்டே இருக்கலாம். அவர்களும் நிறைய கொடுக்கலாம். இருந்தாலும் அவர்களும் அவ்வப்பொழுது, '*I am sorry*. மன்னிக்கவும், இது என்னால் முடியாது' என்று கூறும் சந்தர்ப்பங்கள் உண்டு. மனிதன் என்பவன் யார்? – என்றால், அவ்வப்பொழுது 'சாரி' சொல்பவன், 'முடியாது, வருந்துகிறேன்' என்று சொல்பவன்.

'ஏன் இப்படிப் பேசினாய்?' 'ஏதோ பேசி விட்டேன். சாரி.'

'இதை எனக்குக் கொடேன்.' 'முடியாது. சாரி.'

'இதைக் கொஞ்சம் தூக்கிவிடு.' 'என்னால் முடியாது. சாரி.'

'நான் இந்தத் தவறைச் செய்து விட்டேன். சாரி.'

'நான் இதைச் செய்யாமல் விட்டு விட்டேன் சாரி.'

'இதை என்னால் செய்ய முடியாது, சாரி.'

பலர் தம்முடைய மனைவி, குழந்தைகள் இவர்களின் பிறந்த நாளை மறந்து விடுவார்கள். அப்புறம் 'சாரி. மறந்தே போய் விட்டேன்' என்பார்கள். நம் கலாசாரத்தில் வாழ்நாளில் இரண்டு அல்லது மூன்று முறைதான் பிறந்தநாள் கொண்டாடுவார்கள். முதலில் ஒரு வயது பூர்த்தியாகும்போது, ஆண்டு நிறைவு என்று முதல் பிறந்தநாள் கொண்டாடப்படும். பிறகு ஷஷ்டியப்தபூர்த்தி எனப்படும் அறுபத்தியொன்றாவது பிறந்த நாள். பிறகு பிழைத்திருந்தால், எண்பது வயதிற்குப் பிறகு, அதாவது ஆயிரம் பிறை கண்டபிறகு சதாபிஷேகம் என்று கொண்டாடப்படும். பிறந்த நாள் என்பது பிறந்த தேதி அல்ல; பிறந்த நக்ஷத்திரத்தைத்தான் கொண்டாட வேண்டும். இது வருடாவருடம் வெவ்வேறு தேதிகளில்

வரும். முதல் பிறந்த நாளைப் பெற்றோர்கள் கொண்டாடுவார்கள். பிறகு ஷஷ்டியப்தபூர்த்தி, சதாபிஷேகம் என்பதை அவருடைய குழந்தைகள் கொண்டாடுவார்கள். அந்த தினங்களில் தெரிந்தவர்கள், தெரியாதவர்கள் எல்லோருமே வருவார்கள், இவர்களின் ஆசியைப் பெற. ஏனென்றால் நமது கலாசாரத்தில் வயதுக்கு அவ்வளவு மதிப்பு இருந்தது. கல்யாண தினத்தன்று கல்யாணமான தம்பதி எல்லா மூத்தவர்களுக்கும் – தனக்கு ஒரு நாள் மூத்தவராக இருந்தாலும் சரி – எல்லோருக்கும் விழுந்து, விழுந்து நமஸ்காரம் செய்ய வேண்டும். வயதிற்கு இவ்வாறு மிகுந்த மதிப்பு இருந்தது.

இவர் தன் குழந்தை அல்லது மனைவியின் பிறந்தநாளை மறந்து விட்டார். அவர்களோ நாள்பூராவும் 'இவர் பிறந்தநாள் வாழ்த்து சொல்வாரா, சொல்வாரா?' என்று காத்திருப்பார்கள். அதே சமயத்தில் அவருக்கு ஞாபகப்படுத்தவும் மாட்டார்கள். பிறந்தநாள் வாழ்த்து கூறுவது மேற்கத்திய நாகரீகம். அதனால் அங்கு அவர்கள் ஞாபகமாக எல்லோருடைய பிறந்தநாள்களையும் எழுதி வைத்திருப்பார்கள். இது நம்முடைய கலாசாரம் அல்ல. ஆனால் இப்பொழுது இங்கும் இந்தப் பழக்கம் பரவி விட்டது. பொதுவாக மனைவி மறக்கமாட்டாள். கணவன் மறந்துவிடுவான். 'அவர் ஆபீசைப் பற்றியும், மற்றவர்களைப் பற்றியும்தான் கவலைப்படுகிறார். என்னைப் பற்றிக் கவலையே படுவதில்லை.' என்று குறைப்பட்டுக் கொள்வார்கள். பிறந்தநாள் வாழ்த்து முக்கியம் என்றால் கேட்டு வாங்கிவிடலாமே. ஆனால் மாட்டார்கள். ஏனென்றால் உள்ளுக்குள் ஒரு தாழ்வு மனப்பான்மை. அதனால் மற்றவர்களுடைய வாழ்த்தில் ஓர் அங்கீகாரத்தைத் தேடும் மனப்பான்மை.

ஆகவே 'நான் இதைச் செய்து விட்டேன். சாரி.' அல்லது 'இதை என்னால் செய்ய முடியாது, சாரி.' அல்லது 'நான் இதைச் செய்ய மறந்து விட்டேன் சாரி.' 'நான் தெரியாமல் இந்த வார்த்தையைச் சொல்லிவிட்டேன். சாரி.' இவ்வாறு '*I am sorry*. சாரி, நான் மன்னிப்பை வேண்டுகிறேன்' என்பவன்தான் மனிதன்.

கொடுப்பவர் ஒருவர் இருப்பதை உணர்வதே பக்தி

ஆக, கொடுப்பவர்கள் எல்லோருமே வாங்கும் ஆசாமிகள்தாம். வாங்குவார்கள், கொடுப்பார்கள். கொடுப்பார்கள், வாங்குவார்கள். 'வாங்கவே வாங்காமல், வாங்க வேண்டிய அவசியமே இல்லாமல் கொடுத்துக்கொண்டே இருப்பவரும், எப்பொழுதும் கொடுக்க முடிபவருமான ஆசாமி யாராவது இருக்கிறார்களா?' என்றால், அது ஆண்டவன் மட்டும்தான். ஆண்டவன் என்று ஒருவர் இருக்கிறார் என்று அறிவதே மனிதனுக்கு ஒரு பக்குவத்தை, ஒருவித

மனோபாவத்தைத் தருகிறது. பக்குவத்தினால் அடைந்த இந்த மனோபாவத்தைத்தான் பக்தி என்கிறோம்! ஆகவே பக்தி என்பது செயல் அல்ல, அது ஒரு மனோபாவம்.

நன்றியும், ஆச்சர்யமும் பக்திதான்

இவருக்கு மாதாமாதம் மணி-ஆர்டரில் பணம் வருகிறது. அதைத் தபால்காரர் இவருக்குத் தருகிறார். இவர் அதில் கொஞ்சத்தைத் தபால்காரருக்கு அன்பளிப்பாகத் தருகிறார். (தரவேண்டும் என்ற அவசியம் இல்லை.) அனுப்புவது தன் பையனாக இருந்தால் இவர் சந்தோஷப்படுகிறார். தன் கஷ்டத்தைப் பார்த்து வேறு யாராவது அனுப்புகிறார் என்றால் அவருக்கு நன்றி செலுத்துகிறார். இந்த நன்றி என்பதும் ஓர் உணர்வே ஆகும். நம் தேகம் முதல் எல்லாமே நமக்குக் கொடுக்கப்பட்டது என்று தினந்தோறும் உணரும்போது அதைக் கொடுத்தவரைப் பொறுத்து நமக்கு ஏற்படும் நன்றி உணர்வும் பக்திதான்.

நன்றி மட்டுமல்ல, *Admiration*, ஆச்சர்ய உணர்வும் பக்திதான். இன்று இங்கு பாடப்பட்ட பாடலில்[1] 'ஆண்டவனான நீ போற்றக் கூடிய விஷயங்கள் எல்லாமாகவும் இருக்கிறாய்' என்று பாடப் பட்டது. அந்தப் பாடலில் அதை இயற்றியவர் தான் முக்கியமாகக் கருதிய சில விஷயங்கள் மட்டுமே சொல்லியுள்ளார் என்றாலும், அதில் உள்ள போற்றும் உணர்வும் பக்திதான்!

இறைஞ்சுதலும் பக்தியே

இறைவனிடம் இறைஞ்சும் உணர்வும் பக்திதான். இன்றைய ஆன்மீகவாதிகள் பகவானிடம் சின்னச் சின்ன விஷயங்களைக் கேட்கக்கூடாது என்று கூறுகிறார்கள். அதற்கு அவர்கள் இவ்வாறு ஓர் உதாரணமும் கொடுக்கிறார்கள்.

ஒரு மனிதர் இங்கிருந்து டில்லி சென்று பிரதம மந்திரியைச் சந்திப்பதற்கு நேரம் கேட்டார். மந்திரிக்கோ தலைக்கு மேல் வேலை குவிந்து கிடக்கிறது. அவரிடம் அப்பாயின்மென்ட் கிடைப்பதே குதிரைக் கொம்பு போன்றது. அப்படியும் இவருக்காக சற்று நேரம் ஒதுக்கித் தந்தார். 'உங்களுக்கு என்ன வேண்டும்?' என்று கேட்டார்.

---

[1] வீடுதோறும் விளக்கொளியாவாய், வீதிதோறும் வியன்கலையாவாய்
ஏடுதோறும் எழுத்துரு கொள்வாய், இதயம்தோறும் எழும் இன்பமாவாய்
பாடும் நாவினில் பண்ணொலியாவாய், பார்வைக்கெல்லாம் பரிதி நீ ஆவாய்
நாடு வாழ்ந்திட நல்லருள் ஈவாய், ஞானவாணி பராசக்தி நீயே)

இவரோ 'தருகிறேன்' என்று முதலில் உறுதி கூறுங்கள். பிறகு சொல்கிறேன்' என்கிறார். அவர் மீண்டும், மீண்டும் கேட்டபிறகு 'எனக்கு ஒரு சுண்டைக்காய் வேண்டும்' என்று கூறுகிறார். பிரதம மந்திரிக்குத் தன் காதுகளை நம்ப முடியவில்லை. மீண்டும் 'என்ன? என்ன?' என்று கேட்டார். இவர் சுண்டைக்காய் வேண்டும் என்கிறார். பிரதம மந்திரியைக் கஷ்டப்பட்டு சந்தித்துவிட்டு அவரிடம் ஒரு சுண்டைக்காயைக் கேட்டால்? அவர் இவருக்கு ஒரு சுண்டைக்காயைத் தரச் சொல்வாரா அல்லது 'யார் இவரை உள்ளே அனுப்பியது?' என்று தன் உதவியாளரிடம் கோபப்படுவாரா, அல்லது 'இவரை ஆக்ரா ஹாஸ்பிடலுக்கு[2] அனுப்புங்கள்' என்று சொல்வாரா? என்ன செய்வார்? இன்றோ, நாளோ என்று ஐந்து வருஷங்கள் கூட பதவி உறுதி இல்லாத பிரதம மந்திரியிடமே நாம் சுண்டைக்காயைக் கேட்பது சரியல்ல என்னும்போது, எல்லாம் வல்ல இறைவனிடம் 'எனக்கு பிரமோஷன் வேண்டும்' என்று கேட்பதா?

இவ்வாறு சிலர் பரிஹாசமாகக் கூறி, ஆண்டவனிடம் எதையும் கேட்கக்கூடாது என்பார்கள். நானாக இருந்தால், 'ஐயா, எனக்கோ பிரமோஷன் வேண்டும். கடவுளிடம் இதைக் கேட்கக் கூடாது என்று சொன்னால் நீங்களே வாங்கித் தாருங்களேன்' என்று அவரிடம் கேட்பேன். ஆதலால் நமக்கு வேண்டியதைக் கடவுளிடம் கேட்பதில் தப்பே இல்லை. இவ்வாறு நமக்கு வேண்டியதைக் கேட்டு இறைவனிடம் பிரார்த்திப்பதும் பக்திதான்.

கடவுளுக்கு எல்லாமே சுண்டைக்காய்தான்

இன்னும் சிறிது சிந்தித்துப் பாருங்கள். கடவுளிடம்தாம் நாம் சுண்டைக்காயைக் கேட்கலாம். ஏனெனில் அவரிடம் எதைக் கேட்டாலும் அது அவருக்கு ஒரு சுண்டைக்காய்தான். இந்த பூமியையே நாம் கேட்டாலும், இந்தப் பிரபஞ்சத்தில் அது ஓர் ஊசி முனை அளவு கூட இல்லை எனும்போது அது அவருக்குச் சுண்டைக்காயை விடச் சிறியதாகும். அப்படி இருக்கும்போது அவரிடம் எதைக் கேட்டாலும் தப்பே இல்லை என்பேன்.

மற்றும் சிலர், 'கடவுள் எல்லாம் அறிந்தவர். நீ கேட்காமலேயே உனக்கு என்ன வேண்டும் என்று அவருக்குத் தெரியாதா' என்பார்கள். அவர் எல்லாம் அறிந்தவர் என்றால், நீங்கள் இன்னமும் ஏன் இந்தக் கஷ்ட நிலையில் இருக்கிறீர்கள்? உங்களுக்கோ வேலை இல்லா பிரச்சினை. மற்றும் நூற்றுக் கணக்கான பிரச்சினைகள்

[2] இது சென்னையில் கீழ்பாக்கத்தில் மன நலம் குன்றியவர்களுக்காக உள்ள மருத்துவமனை போன்று வடக்கில் உள்ள பெரிய மருத்துவமனை.

உள்ளன. இவை எல்லாமே அவருக்குத் தெரியும் என்றாலும், அவர் ஏன் உங்களுக்கு வேலை கிடைக்கும்படிச் செய்யவில்லை? உங்கள் கஷ்டங்களை ஏன் தீர்க்கவில்லை?

இவ்வாறு யோசிக்கும்பொழுது நாம் ஏதோ ஒரு விசேஷ முயற்சி செய்ய வேண்டுமோ என்று தோன்றுகிறது. கிணற்றில் நிறைய நீர் இருக்கிறது. அப்படி இருந்தும் நாம் தாகத்தால் மிகவும் தவிக்கிறோம் என்றால், அந்தத் தண்ணீரைப் பெறுவதற்கு ஏதோ ஒரு முயற்சி தேவைப்படுகிறது. ஒரு கயிற்றையும் வாளியையும் எடுத்து வந்து தண்ணீரை வெளியே கொண்டு வருவதற்கான முயற்சி தேவைப்படுகிறது. அவ்வாறே இங்கும் முயற்சி என்பது பிரார்த்தனையின் மூலம் இறைவனிடம் உதவி நாடுதல் ஆகும். இதுதான் புத்திசாலித்தனமான வழி.

மனிதனுக்குள்ள விசேஷசக்தியான விவேகம்

ஒரு விஷயம் எல்லோருக்கும் தெரியும். மனிதனுக்கு மட்டும் விவேகம் என்ற சக்தி கொடுக்கப்பட்டிருக்கிறது. இதை ஆறாவது அறிவு, பகுத்தறிவு என்றும் சொல்வார்கள். கொடுக்கப் பட்டிருக்கிறது என்றால், அது பிறக்கும்போதே உள்ளது. முதலில் குழந்தையாக இருக்கும்போது அந்த சக்திக்கு வலிவு இல்லாமல் இருக்கும். வயதாக, வயதாக அந்த சக்தியும் வளர்ச்சி பெறுகிறது. அது முழு வளர்ச்சி அடைந்து விட்டது என்றால், 'இது எனக்கு நல்லது,' 'இது எனக்கு நல்லதல்ல,' 'இது எனக்கு நல்லது என்றாலும் பிறருக்கு நல்லதல்ல' என்று நல்லது தீயது தெரிந்து செயல்பட முடிய வேண்டும். இதுதான் விவேகம். இந்த சக்தி நமக்கு கொடுக்கப்பட்டு இருப்பதால் நாம் நம் செயல்களைத் தேர்ந்தெடுத்துச் செயல்பட வேண்டும். இவ் வாறு தேர்ந்து செய்யும் செயல்களுக்கு த்ருஷ்டம், அத்ருஷ்டம் என்ற இருவிதமான பலன்கள் கிடைக்கின்றன. இதை நாம் நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

கண்ணுக்குப் புலப்படாத பலன் அத்ருஷ்டம் எனப்படும். அத்ருஷ்டம் என்றால் பலர் லாட்டரி டிக்கெட்டில் பரிசு விழுவது போன்றது என்று நினைக்கிறார்கள். அதுவும் அத்ருஷ்ட பலன்தான் என்றாலும், அது மட்டுமே அத்ருஷ்ட பலன் அல்ல. த்ருஷ்டம் என்றால் நமக்குத் தெரியக்கூடியது, உடனடியாக அனுபவத்திற்கு வரக்கூடியது, கண்கூடான பலன் என்று அர்த்தம். ஒரு குளத்தில் கல்லை எறிகிறோம். உடனே அந்த இடத்தில் வட்டமாக அலை வரிசைகள் ஏற்படுகின்றன. இது கல்லை எறிந்ததன் த்ருஷ்ட பலன். இப்பொழுது ரோடில் போகிறவர் கார் ஹார்னை அமுக்குகிறார். உடனே அந்தச் சத்தம் நம் காதில் விழுகிறது. இது த்ருஷ்ட பலன்.

நான் மைக்கில் பேசும் போது அந்தச் சத்தம் அதிகரிக்கப்பட்டு உங்கள் காதில் விழுகிறது. தண்ணீரை அடுப்பில் வைத்து சூடு செய்தால் 100^0 செ. அடையும் போது தளதளவெனக் கொதிக்கிறது. இவை எல்லாம் த்ருஷ்ட பலன்.

மிருகங்களுக்கும், பட்சிகளுக்கும்கூட த்ருஷ்ட பலன் உண்டு. ஆனால், அவற்றுக்கு த்ருஷ்டபலன் மட்டுமே உண்டு. அத்ருஷ்ட பலன் என்பது கிடையாது. கழுதைக்குப் பின்னால் போனால் அது நம்மை உதைக்கும். உதை பட்டவரிடமிருந்து திரும்ப அடி வாங்குவது என்ற த்ருஷ்ட பலன் வேண்டுமானால் அதற்குக் கிடைக்கலாம். உதைப்பது என்பது நல்ல செயல் அல்ல என்றாலும் கழுதைக்கு அதனால் பாபம் என்னும் அத்ருஷ்ட பலன் கிடையாது. ஆனால் கழுதையின் உதையினால் நமக்குப் பல் போனதில் நம்முடைய பாபம் கொஞ்சம் கழிந்திருக்கலாம். ஆக, மிருகங்களுக்கு விவேகம், பகுத்தறிவு என்பது கிடையாது என்பதால், அவற்றுக்கு தர்மம், அதர்மம் என்பதோ, அதனால் விளையும் புண்யம் பாபம் என்பதோ கிடையாது. அவை *impulsive*-ஆக, அதாவது அவற்றின் மனதில் எந்த உணர்ச்சி ஏற்படுகிறதோ அதன்படியே உடனடியாகச் செயல்படும். அவ்வாறு செயல்படும்படித்தான் அவை *program* செய்யப்பட்டுள்ளன, ஆண்டவனால் படைக்கப்பட்டுள்ளன. ஆண்டவனால் செய்யப் பட்டுள்ள அந்த ப்ரோக்ராமை அதன் பெற்றோர் சிறிது மாற்றி அமைக்கலாம், மனிதனும் பயிற்சிகளின் மூலம் அதைச் சிறிது மாற்றி அமைக்கலாம். அதுவும் 'ப்ரோக்ராமிங்க்' தான். ஆனால் அவற்றுக்கு விவேகம் இருப்பதாகத் தெரியவில்லை.

ஒரு பசுவிற்கு 'நான் வெள்ளை, அந்தப் பசு கருப்பு, ' 'நான் உயரம், அது குள்ளம்,' 'நான் நல்ல இடத்தில் இருக்கிறேன், அது தரித்ரமான இடத்தில் இருக்கிறது,' 'நான் 10 லிட்டர் பால் கொடுக்கிறேன், அது 1½ லிட்டர்தான்' என்ற உயர்வு தாழ்வு மனப்பான்மைகள் (*complexes*) எல்லாம் இல்லை. எந்தப் பசுவும் காலையில் எழுந்தவுடன் தன் கொம்பைக் கண்ணாடியில் பார்த்துக் கொள்வதையோ, அதற்குப் பலவித வர்ணங்கள் தீட்டிக் கொள்வதையோ, பூச்சூடிக் கொள்வதையோ நாம் காண்பதில்லையே!

ஆனால், மனிதர்களோ தம் பற்கள் கோணலாக இருந்தால் அதற்கான சிறப்புப் பல்மருத்துவரிடம் (*orthodontist*) அதைச் சரி செய்து கொள்கிறார்கள். மூக்கு கோணலாக இருந்தால் பிளாஸ்டிக் சர்ஜனிடம் சரி செய்து கொள்கிறார்கள் அவ்வாறு பசுக்கள் நம் கொம்பு கோணலாக இருந்தால் அதற்கான சிறப்பு மருத்துவரிடம் சென்று அதை நேராக்கிக் கொள்ளலாம், புது கொம்பு பொறுத்திக்

கொண்டு தன்னை அழகு படுத்திக் கொள்ளலாம் என்று எண்ணுவது இல்லை. ஆக அவற்றுக்கு விவேகம் என்பதும் இல்லை, அதனால் அவற்றுக்கு த்ருஷ்ட பலன் மட்டுமே உண்டு, அத்ருஷ்ட பலன் என்பது இல்லை.

விவேகமும், சாய்ஸூம் உள்ளவர்களுக்கே பாபபுண்யம்

ஆனால் மனிதர்களுக்கு விவேக சக்தி, பிரித்து அறிந்து கொள்ளும் சக்தி இருக்கிறது. செயல்கள் செய்வதற்கான அடிப்படை மனிதனுக்குத் தெரிந்துள்ளது. அத்துடன் செய்வதற்கு ஒரு சுதந்திரம் உள்ளது. கர்த்தும் ஶக்யம் – ஒன்றைச் செய்யலாம், அகர்த்தும் ஶக்யம் – செய்யாமலும் இருக்கலாம், அந்யதா$_2$ வா கர்த்தும் ஶக்யம் – வேறு விதமாகவும் செய்யலாம். சாப்பிடலாம், சாப்பிடாமலும் இருக்கலாம், கையாலும் சாப்பிடலாம், ஸ்பூனினாலும் சாப்பிடலாம். சைவ உணவையும் சாப்பிடலாம், ஆடு கோழி முதலியவற்றையும் சாப்பிடலாம் என்ற சுதந்திரம், சாய்ஸ் இருக்கிறது. ஆனால், ஒரு பசுவிற்குப் புல்லுடன் மாம்சத் துண்டுகளையும் கொடுத்தால் அது புல்லை மட்டும் உண்ணும், மாம்சத்தை மனிதனுக்கு வைத்து விடும்.

நேற்று ஒரு பத்திரிகையில் நான் துணுக்கொன்று படித்தேன். அதில் ‘மனிதனுக்கு இருப்பது போல் மிருகங்களுக்கு இடுகாடு உண்டா, சமாதி உண்டா?’ என்று ஒரு கேள்வி. அதற்கு, ‘மனிதனுக்கு மட்டும்தான் இடுகாடு. மிருகங்களுக்குத் தனித்த இடுகாடு தேவை இல்லை; ஏனென்றால் மனிதனுடைய வயிறே மிருகங்களுக்கான இடுகாடு, சமாதி’ என்று திருமுருக கிருபானந்த வாரியார் கூறியதாக எழுதியிருந்தது.

மனிதன் குரங்கிலிருந்து வந்தவன் என்று சொல்கிறார்கள். குரங்கு வெஜிடேரியன்தான். மனிதன் குரங்கிலிருந்து பரிணாமம் அடைந்தவன் என்றால் அவன் அதைவிட சுத்த சைவமாக இருக்க வேண்டும். ஆனால் மனிதன் கண்டவற்றை எல்லாம் சாப்பிடுகிறான். ‘பலம் வேண்டும், புரோட்டீன் சத்து வேண்டும் என்றால் மாம்ச உணவைச் சாப்பிட வேண்டும்’ என்று கூறுவதைக் கேட்டு ஏமாந்து போகாதீர்கள். அன்னம் என்றாலே அது சைவ உணவுதான். வேதம் ‘ஓஷ**தீ$_4$ப்$_4$**ய: அந்நம் – தாவரங்களிலிருந்துதான் அன்னம்’ என்று தெளிவாகக் கூறுகிறது. யானை சிங்கத்தையே எதிர்த்து நிற்கக் கூடியது. யானை பலம் என்று கூறுகிறோமே, அந்த யானை சுத்த சைவம்தான். புரத சத்திற்காக மனிதன் சாப்பிடும் ஆடு சுத்த சைவம்தான். ஒரு மாம்சபக்ஷிணியான மிருகம், மற்றொரு மாம்ச பக்ஷிணியைத் தின்கிறது, அதுவும் மற்றொரு மாம்சபக்ஷிணியைத் தின்கிறது என்று வைத்துக் கொண்டாலும், இந்தத் தொடரில்

கடைசியில் அவைகளும் ஏதாவது சாகபக்ஷிணியான, சைவ உணவைச் சாப்பிடும் மிருகத்தைத்தான் உண்கின்றன. ஆதலால், உணவு என்றாலே அது தாவர உணவு மட்டுமே. இதுதான் உண்மை.

ஓர் ஆட்டை, புல் காய் முதலியவற்றைப் போட்டுக் கொழுக்க வைத்து, பிறகு மனிதன் அதைச் சாப்பிடுகிறான். ஒரு புலி ஆட்டைக் கொன்று தின்றால், அதனால் அதற்குப் பாபம் இல்லை. ஆனால், ஒரு மனிதன் தின்றால் அது பாபம்.

ஓர் ஓங்கோல் அல்லது ஒரு காங்கேயப் பசு இனக் கலப்பு செய்வதற்காக அமெரிக்கா செல்ல இருக்கிறது. அதனால் மற்ற பசுக்கள் எல்லாம் சேர்ந்து அதற்கு பிரிவிடை கூற வருகின்றன. அப்பொழுது அதைப் பார்த்து, 'அம்மா, நம்முடைய வம்சத்தில் காமதேனு முதல் தலைமுறை தலைமுறையாக எல்லோருமே சுத்த சைவமாக இருந்திருக்கிறோம். எங்கேயாவது அமெரிக்கா போனபின் எதையாவது சாப்பிட ஆரம்பித்து நம் குலத்தின் பெயரைக் கெடுத்து விடாதே' என்று சொல்ல வேண்டிய அவசியம் இருக்கிறதா?

ஆனால் உங்கள் பெண்ணோ அல்லது பையனோ அமெரிக்கா செல்கிறார் என்றால் இப்படிக் கூறித்தான் அனுப்ப வேண்டும். அவர்களும் அதற்கு உண்மையான பதிலைக் கூறுவது என்றால், 'முடிந்தவரை சைவமாக இருப்பதற்கு முயற்சி செய்கிறேன்' என்று கூற வேண்டும். ஏனென்றால், எல்லோரும் அங்கு போன பிறகு மாறி விடுகிறார்கள். ஜைன மதத்தினர் மிக, மிக சுத்த சைவம் என்று பெயர். அவர்கள்கூட நான்-வெஜிடேரியன், அசைவம் ஆகி விடுகிறார்கள் என்றால் என்ன சொல்வது? அதுவும் எனக்குத் தெரிந்த ஒருவர் என்னெதிரிலேயே 'ப்ளீஸ் எக்ஸ்க்யூஸ் மீ' என்று சொல்லி விட்டு அசைவ உணவு சாப்பிடுகிறார். 'மன்னிக்கவும்' என்று சொல்லி விட்டால் எதை வேண்டுமானாலும் செய்யலாம் போல் இருக்கிறது!

ஆதலால், மனிதனுக்குத்தான் ஒவ்வொரு விஷயத்திலும் சூஸ் செய்ய வேண்டிய அதாவது தேர்ந்தெடுக்க வேண்டிய நிர்பந்தம் உள்ளது. இப்பொழுது எழுந்திருக்கலாமா, இன்னும் சிறிது நேரம் தூங்கலாமா என்பது முதல் சாய்ஸ். அடுத்து குளிக்கலாமா, வேண்டாமா – அடுத்த சாய்ஸ். பிறகு எந்த உடை உடுப்பது என்பது அடுத்த சாய்ஸ். ஜீன்ஸ் என்று ஓர் உடை. அது மிகவும் வசதியானதாக இருக்கலாம். ஆனால் புதிய ஜீன்ஸைப் பழையதுபோல் செய்து, அதில் ஓட்டுகள் போட வேண்டும். அதன் ஓரம் பிசிறு, பிசிறாக இருக்கும்படிச் செய்ய வேண்டும் தலையை வாரினாலும் வாராதது போல் இருக்க வேண்டும். ஒற்றைக் காதில் கடுக்கன் போட வேண்டும். அப்பொழுதுதான் அது '*cool*' அதாவது இன்றைய

ஃபாஷனுடன் ஒட்டியது! இன்றைய ஃபாஷனுடன் ஒட்டி உடுப்பதா, அல்லது வேறு மாதிரி உடுப்பதா என்பது ஒரு சாய்ஸ்.

ஆகவே நாம் என்ன உடை உடுக்கிறோம், என்ன சாப்பாடு சாப்பிடுகிறோம், எவ்வளவு, எத்தனை முறைகள் சாப்பிடுகிறோம், எப்படி – பிரார்த்தனை பண்ணிய பிறகா, பிரார்த்தனை பண்ணாமலா – இதற்கெல்லாம் நமக்கு ஓர் உரிமை, ஒரு சுதந்திரம் இருக்கிறது. ஏனெனில் செய்யலாம், செய்யாமல் இருக்கலாம், இப்படியும் செய்யலாம், அப்படியும் செய்யலாம் என்ற சுதந்திரம் இருக்கிறது. இந்த சுதந்திரத்தைப் பயன்படுத்தி நாம் 'சூஸ்' செய்ய வேண்டும், தேர்ந்தெடுக்க வேண்டும்.

சாய்ஸ் என்றாலே அது தப்பாகவும் இருக்கலாம், சரியாகவும் இருக்கலாம். ஆதலால், ஒவ்வொரு முறை நாம் தேர்ந்தெடுக்கும் போதும் இது சரியா, இது தப்பா என்று நாம் பகுத்தறிய வேண்டும்.

தேர்ந்தெடுப்பதற்கு வேண்டிய அடிப்படை விவேகம்

இது சரி, இது தப்பு என்பதை எப்படித் தெரிந்து கொள்வது? நமக்கு காமன் சென்ஸ், நடைமுறை அறிவு ஒன்று இருக்கிறது அல்லவா, அதன்மூலம் நாம் எது தர்மம், எது தர்மம் என்று பகுத்து அறிய வேண்டும்.. பிறர் செய்யும் செயல்களில் எது நமக்கு அனுகூலமாக இருக்கிறதோ, இஷ்டமாக இருக்கிறதோ, நன்மையைச் செய்கிறதோ அது தர்மம். எது பிரதிகூலமாக உள்ளதோ, எது நமக்குக் கஷ்டத்தைக் கொடுக்கிறதோ, எது நமக்கு வேண்டாமோ அது அதர்மம். இது எல்லோருக்குமே தெரிந்து இருக்கிறது. ஏன், திருடனுக்கும்கூடத் தெரிந்து இருக்கிறது.

திருடனுடைய சொத்தை வேறு யாராவது திருடினால் அவன் அவர்களைச் சும்மா விட்டு விடுவானா? திருடுவது தவறு என்று தெரிந்ததால்தான் அவன் ராத்திரி நேரத்தைத் தேர்ந்தெடுக்கிறான். கத்தியை எடுத்துக் கொண்டு வருகிறான். மெதுவாக, சத்தம் செய்யாமல், ஒருவரும் இல்லாத சமயம் பார்த்து வருகிறான். ஏனென்றால் தான் எவரிடமிருந்து திருட நினைக்கிறானோ, அது அவர்களுக்கு இஷ்டமில்லை என்று அவனுக்குத் தெரியும். ஆகவே நல்லது, கெட்டது என்பது எல்லோருக்குமே தெரிந்திருக்கிறது.

ஆனால் 'இது எனக்கு நல்லதே' என்று சிலர் நினைக்கலாம். நம் செயல் மற்றவர்களுக்கு நல்லதில்லை என்றாலே, அது தவறுதான். மேலும், அது நமக்கு நல்லது போன்று தோன்றினாலும், உண்மையில் நமக்கும் நல்லது இல்லைதான்.

‘பணம் நல்லது இல்லையா?’

‘பணம் எல்லோருக்கும் நல்லதுதான். ஆனால் திருடிப் பணம் சம்பாதிப்பது தவறு.’

‘இதில் எனக்குப் பணம் கிடைக்கிறதே, இது எனக்கு நல்லதுதானே!’

‘உனக்கும் இது கெடுதல்தானப்பா. இதைப் புரிந்து கொள்வதுதான் மனப்பக்குவம் என்பது! பணம் நல்லது செய்யும் என்றாலும் திருடுவது அல்லது ஏமாற்றுவது என்பது நல்லது செய்யாது. அதற்கு த்ருஷ்ட பலன், அத்ருஷ்ட பலன் இரண்டும் உண்டு. மாட்டிக் கொண்டால் ஜெயிலில் போடுவார்கள் என்பது த்ருஷ்டபலன்.’

‘அந்த ரிஸ்கை நான் எடுத்துக் கொள்ளத் தயார். எதில்தான் அபாயம் இல்லை? சாலையைக் கடப்பதில்கூட அபாயம் இருக்கிறதே! மாட்டிக் கொண்டால் நான் ஜெயில் வாசம் செய்யத் தயார். மாட்டிக்கொள்ளாவிடில் எனக்குப் பணம் கிடைக்கிறதே! மேலும், எத்தனையோ முறை நான் மாட்டிக் கொள்ளாமல் திருடி இருக்கிறேனே. ஆதலால் இன்றும் திருடப்போகிறேன். இதில் என்ன தப்பு?’

‘உன் சொத்தை யாராவது திருடினால் உனக்குப் பிடிக்குமா?’

‘எவனாவது தொட்டுவிடுவானா? சுட்டு விடுவேன் சுட்டு.’

‘அப்பொழுது மற்றவர்களின் பொருளை நீ ஏன் திருடுகிறாய்?’

‘எனக்குப் பணம் வேண்டும். அதனால் திருடுகிறேன். ஆனால் என்னுடைய சொத்தை யாரும் திருடக்கூடாது. நான் ரிஸ்க் எடுக்கிறேன். பிஸினெஸ் செய்பவர்கள் ரிஸ்க் எடுக்கத் துணிவதில்லையா? யாராவது ஃபைனான்சியர் 24% வட்டி தருகிறேன் என்றால் நீங்கள் அங்கு பணம் போடுவதில்லையா? 24% வட்டி என்றால், அவனுக்கு உங்கள் பணத்தில் 76% தாரை வார்த்துவிட்டீர்கள் என்று அர்த்தம். அது ரிஸ்க் இல்லையா? வாழ்க்கை முழுவதுமே ரிஸ்க்தான். இதில் மட்டும் என்ன? நான் எப்படியும் தப்பி விடுவேன்.’

‘அப்பா, நீ த்ருஷ்ட பலனிலிருந்து, அதாவது போலீசால் பிடிபடுவது என்ற த்ருஷ்ட பலனிலிருந்து தப்பிக்கலாம். ஆனால், அத்ருஷ்ட பலனிலிருந்து தப்பிக்க முடியாது. த்ருஷ்ட பலனிலிருந்துகூட தப்பித்ததாகச் சொல்ல முடியாது. ஏனெனில் திருடுவது தப்பு என்று உனக்குத் தெரிந்திருப்பதால் வாழ்நாள் முழுவதும் நீ குற்ற உணர்விலிருந்து, மன

உறுத்துதலிலிருந்து விடுபட முடியாது. பிடிபட்டுவிடுமோ என்ற பயத்திலிருந்தும் தப்பிக்க முடியாது. காக்கிச் சட்டையைப் பார்த்தாலே உன்னைப் பிடிக்க வருகிறார்களோ என்ற பயம் வரும்.'

பிடிபடுவது என்பதுடன் இந்தக் குற்ற உணர்வு, பயம் இவை எல்லாமும் த்ருஷ்ட பலனில் அடங்கும். அத்துடன் அத்ருஷ்ட பலன் என்று ஒன்றும் இருக்கிறது. எல்லோரும் எதை மற்றவர்களிடமிருந்து எதிர்பார்க்கிறார்களோ அது தர்மம். எதை எல்லோரும் பிறரிடமிருந்து விரும்பவில்லையோ அது அதர்மம்.

பிறரிடமிருந்து நமக்குத் துன்பம் ஏற்படக்கூடாது என்ற எண்ணம் எல்லோருக்கும்தான் இருக்கிறது. ஒரு கொசு நம்மைக் கடிப்பதைக்கூட நாம் விரும்புவதில்லை. 'என்னை ஏன் கடிக்கிறாய்? எனக்குப் பிடிக்காதவர் அடுத்த அறையில் இருக்கிறார். அவரைப் போய் கடியேன்.' என்று ஒருவர் நினைக்கலாம். இத்தகைய எண்ணமே பக்குவம் இல்லாததைக் காட்டுகிறது. அடுத்த அறையில் உள்ளவரும் கொசு தன்னைக் கடிக்கக்கூடாது என்றுதான் நினைக்கிறார். அது மட்டுமல்ல. அந்தக் கொசுவும் நம் கையில் அடிபடுவதை விரும்புவதில்லை. அதனால்தான் நாம் அடித்து நசுக்க முடியாத இடமாகப் பார்த்து, முதுகு, கால் கைகளின் அடிபாகம் இவற்றைத்தான் கடிக்கிறது.

தர்ம, அதர்மங்களுடைய அத்ருஷ்டபலனே புண்யபாபம்

மிருகங்கள், மனிதர்கள் எல்லோருக்குமே தனக்கு யாராலும் துன்பம் ஏற்படக்கூடாது என்ற உணர்வு இருக்கிறது. அப்படி இருக்கும்போது, நாம் ஏன் மற்றவர்களுக்குத் துன்பம் விளைவிக்க வேண்டும்? 'ஏதோ செய்கிறேன் சார்' என்று சொன்னால் அது மனப்பக்குவம் இல்லாததைக் காட்டுகிறது. ஆதலால் பிறருக்குத் துன்பத்தைக் கொடுக்கக்கூடும் என்று தெரிந்தும் அத்தகைய செயல்களைச் செய்தால் அதற்கு ஒரு பலன் இருக்க வேண்டும். அதுதான் அத்ருஷ்ட பலன், கண்ணுக்குத் தெரியாத பலன். அது பாபம் எனப்படும். அந்தப் பலன் நம் கணக்கில் வைக்கப்படும்.

அவ்வாறே புண்யம் என்ற அத்ருஷ்ட பலனும் உண்டு. நாம் ஒரு நல்ல காரியம் செய்யும்போது, அல்லது பிறருக்கு உதவி செய்யும்போது – அதைச் செய்யலாம், செய்யாமலும் இருக்கலாம் என்பதால் – அதற்குப் புண்யம் என்ற பலன் கிடைக்கிறது. மற்றவர்களுக்குப் பொருளினாலோ, செயலினாலோ, வாக்கினாலோ உதவி செய்யலாம். வேறொன்றும் செய்ய முடியாவிட்டாலும்

அவருக்காகப் பிரார்த்தனையாவது செய்யலாம். அந்தப் பிரார்த்தனை புண்யத்தை உண்டுபண்ணி நாம் யாருக்காகப் பிரார்த்தனை செய்தோமோ அவர் கணக்கில் அந்தப் புண்யம் சேரும். மேலும், பிரார்த்தனை என்பது மானஸ கர்மம் என்பதால், அதாவது மனதினால் செய்யப்படும் செயல் என்பதால், அது அதைச் செய்பவருக்கும் புண்யத்தைத் தருகிறது.

இவ்வாறு அத்ருஷ்ட பலன் நம் கணக்கில் வைக்கப்பட்டு வேறு ஒரு சமயத்தில் வெளிப்படும். புண்யம் என்பது ஸுகத்தைக் கொடுக்கும் சந்தர்ப்பமாகவும், அறிவைக் கொடுக்கும் சந்தர்ப்பமாகவும் அமையும். ஆனால் அதுவே நேரடியாக ஸுகத்தையோ, ஞானத்தையோ கொடுக்கும் என்பதல்ல, அதற்கு சாதகமான சந்தர்ப்பத்தைத்தான் அது உண்டு பண்ணும். உதாரணத்திற்கு ஒருவர் மிகுந்த பசியுடன் இருக்கும்போது அவரை அழைத்து யாராவது சாப்பாடு போட்டால் அது ஸுகத்தைக் கொடுக்கும் சந்தர்ப்பம். ஆனால் அதை அனுபவிப்பதோ அல்லது போட்டது சரி இல்லை என்று முணுமுணுப்பதோ சாப்பிடுபவர் கையில் உள்ளது. அனுபவிக்காமல் முணுமுணுத்தால் மனப்பக்குவம் இல்லை என்று அர்த்தம்.

சில சமயங்களில் ‘இது என் கர்மம்’ என்று தலையில் அடித்துக்கொள்வதைப் பார்க்கலாம். ஏனென்றால் அத்ருஷ்டமான பாபம் நமக்கு இஷ்டமில்லாத, துக்கத்தைக் கொடுக்கக்கூடிய சந்தர்ப்பமாக அமைகிறது. ஒருவர் காலையில் எழுந்தபோது நன்றாக இருந்தார்; பிறகு குளிக்கும் அறையில் வழுக்கி விழுந்து எலும்பை உடைத்துக் கொண்டார் என்றால், ஒரு பாபம் வெளிப்பட்டுள்ளது என்று அர்த்தம்!

மனிதன் ஒரு மிச்ரா

புண்யம், பாபம் என்ற இரண்டுமே ஜீவனின் அதாவது மனிதனின் கணக்கில் முந்தைய பல ஜன்மங்களில் சேர்க்கப்பட்டு மூட்டை, மூட்டையாக உள்ளது. அது ஸஞ்சிதம் எனப்படும். அது நம்முடைய ஃபிக்ஸெட் டெபாஸிட் போன்றது. அதிலிருந்து குறிப்பிட்ட சில கர்மபலன்கள் இந்த மனித ஜன்மத்தைக் கொடுத்திருக்கின்றன. இதற்கு ப்ராரப்தம் என்று பெயர். இதைத்தான் ஓரளவு ஜோதிஷத்தில் பார்க்கிறோம். இந்தியாவின் வடகிழக்குப் பகுதியில் சிலருடைய பெயர் மிச்ரா என்று முடியும். ஆனால் அவர்கள் மட்டுமல்ல; எல்லா மனிதர்களுமே மிச்ராக்கள்தான். மிச்ரம் என்றால் கலப்பு. அதை உடையவன் மிச்ரா. மனிதர்கள் பாபம், புண்யம்

இரண்டும் மிச்ரமான – கலந்த ஜன்மங்கள், இரண்டும் கலந்து வெளிப்படும் பிறவிகள். ஆதலால், அனைவருமே மிச்ராக்கள்தாம்!

இப்பொழுது நான் இங்கு வந்திருக்கிறேன். இந்தப் பேச்சை, ஸத்ஸங்கத்தைக் கேட்கும் வாய்ப்பு உங்களுக்குக் கிடைத்திருக்கிறது. இது உங்களுக்கு சந்தோஷத்தைத் தருகிறது. இதுவும் புண்யம்தான். ஆனால் இது வேறுவிதமான புண்யம். நாம் பல இலக்கிய புத்தகங்களைப் படித்து மகிழ்கிறோம். அது மற்றொரு விதமான சுகம் – வித்யா சுகம். சாதாரணப் பத்திரிகைகள் படிக்கிறோம், சினிமா பாட்டுகள் கேட்கிறோம். அது அப்போதைய சுகம். காவியங்களைப் படிக்கும்போது, நல்ல சாஸ்த்ரீய சங்கீதம் கேட்கும்போது கிடைக்கும் சுகமானது வேறு. அது நீண்டு நிற்கும் சுகம். ஆதலால் பலவிதமான புண்யங்கள் இருக்கின்றன. முன்பு செய்த கர்மமும், இப்பொழுது செய்த கர்மமும் சேர்ந்தே நமக்கு இப்பொழுது பலனைக் கொடுக்கின்றன.

மனிதர்கள் எல்லோருமே பாபம் புண்யம் இரண்டும் உடையவர்கள். ஒவ்வொரு நாளும் வெளிப்பட வேண்டிய, பலனளிக்க வேண்டிய பாப, புண்யங்கள் அந்தந்த நாளில் தம் பலனை அளித்து முடிந்து விடுகின்றன. அன்றாடம் வெளிப்படும் இன்ப, துன்பங்கள் இந்த ஜன்மத்தில் செய்தவற்றின் பலனாகவும் இருக்கலாம் அல்லது இதற்கு முந்தைய ஜன்மத்தின் செயல்களுடைய அல்லது எத்தனையோ ஜன்மங்களுக்கு முன்பு செய்தவற்றுடைய பலனாகவோ இருக்கலாம். எல்லாமே கலந்துதான் வருகின்றன. தனக்கு நல்ல சந்தர்ப்பங்கள் வரும்போது ‘முன்பு நான் செய்த புண்ணியத்தினால் எனக்கு இந்த சந்தர்ப்பம் வந்துள்ளது’ என்று மனப்பக்குவமுள்ள மனிதன் நினைக்கிறான். இதில் கர்வப்படுவதற்கு ஏதும் இல்லை. இது தன் செயலுக்கு *responsibility*, பொறுப்பு ஏற்பதாகும். அவ்வாறே கஷ்டம் ஏற்படும்போதும் ‘நான் முன்பு செய்த கர்மத்தின் பலன்தான் இது’ என்று நினைக்கிறான். இவ்வாறு கஷ்டம் வரும் போது அதைப் போக்கிக்கொள்ள வழி இருக்கிறதா என்றும் யோசிக்கிறான்.

ஒரு கர்மபலனை வேறு செயலால் மாற்றி அமைக்கலாம்

கர்மபலனை நாம் அனுபவித்துத்தானே தீர்க்க வேண்டும். அதை எப்படிப் போக்குவது? த்ருஷ்ட பலனாக இருந்தால் அதை நீக்கலாம். இதை அன்றாடம் நாம் செய்கிறோம். சாம்பாரில் இரண்டு முறை உப்பு போட்டதால் உப்பு அதிகம் ஆகிவிட்டது. அப்பொழுது என்ன செய்கிறோம்? அதில் கொஞ்சம் தண்ணீர் சேர்த்தோ அல்லது அதைக் கலந்த சாதமாகச் செய்தோ உப்பின் தாக்கத்தை குறைக்கிறோம். இது லௌகிக பிராயச்சித்தம். அதாவது ஒரு

செயலினால் ஏற்படும் தப்பை மற்றொரு செயலினால் சரி செய்வது. அதேமாதிரி, வியாதிக்காக டாக்டரிடம் போகிறோம். டாக்டர் ஒரு மருந்து தருகிறார். அதற்கு அலர்ஜி வந்ததால் உடம்பு வீங்குகிறது அல்லது வாந்தி ஏற்படுகிறது. பழைய வியாதி குறையவில்லை. அப்பொழுது டாக்டர் என்ன செய்கிறார்? முதலில் இந்த அலர்ஜிக்கான மருந்தைத் தருகிறார். அதை முதலில் சரி செய்துவிட்டு பிறகு வியாதிக்கு மருந்தைத் தருகிறார். இது த்ருஷ்ட பலன்; ஏனென்றால் மருந்தைச் சாப்பிடவுடன் வந்தது என்று உடனடியாக அதன் பலனைப் பார்க்கிறோமே. அத்துடன் மற்றொரு மருந்தின்மூலம் அந்தப் பலன் நீங்கி சரியாகும் த்ருஷ்ட பலனையும் பார்க்கிறோமே. ஆதலால் **த்**₃ருஷ்டம் **த்**₃ருஷ்டேன ஶாம்யதி – ஒரு த்ருஷ்ட பலன் மற்றொரு த்ருஷ்ட பலனை உண்டு பண்ணும் செயலால் சரி செய்யப்படுகிறது. அவ்வாறே அத்ருஷ்ட பலனையும் அத்ருஷ்டத்தினால்தான் நீக்க வேண்டும்.

அத்ருஷ்டத்தை அத்ருஷ்டத்தினால் நீக்கவேண்டும் என்பது சரிதான். ஆனால் அத்ருஷ்டம் என்றால் என்னவென்றே தெரியவில்லையே என்ற சந்தேகம் எழலாம். தெரிய வேண்டிய அவசியம் இல்லை. தெரியாததினால்தான் அது அத்ருஷ்டம் எனப்படுகிறது. தினமும் அத்ருஷ்டத்தை உண்டு பண்ணக்கூடிய செயல்களை நாம் செய்தால், அது தன் விஷயத்தைப் பார்த்துக் கொள்ளும். அன்றாடம் செய்ய வேண்டிய செயல் நித்ய கர்மம் எனப்படும். பூஜை, ஜபம், பாராயணம், சந்த்யாவந்தனம் முதலிய நித்ய கர்மங்களை செய்கிறோம். இவை தினந்தோறும் செய்யப்பட வேண்டியவை. இவை நமக்கு அத்ருஷ்ட பலனை உண்டு பண்ணுகின்றன. (இவை த்ருஷ்ட பலனையும் உண்டு பண்ணுகின்றன. அதைப் பற்றி பின்னர் பார்க்கலாம்.)

ஆண்டவன் தம் நியதிகள்மூலமே பலனைத் தருகிறார்

பிரார்த்தனை என்பது ஆண்டவனை முகஸ்துதி செய்வது போன்றது என்று சிலர் எண்ணுகிறார்கள். அது தவறு. ஆண்டவனை நாம் முகப்புகழ்ச்சி செய்தோ, தாஜா செய்தோ, லஞ்சம் கொடுத்தோ அவரிடமிருந்து நமக்கு வேண்டியதை வாங்கிக் கொள்ள முடியாது. அவர் அரசாங்க உத்யோகஸ்தர் இல்லை அவ்வாறு கொடுப்பதற்கு. மேலும், அவரைப் பற்றி அதிகம் கூறி அவரை நாம் முகப்புகழ்ச்சி செய்ய முடியாது. ஏனெனில் அவருடைய மஹிமையைப் பற்றி நாம் அறிவது மிகவும் குறைந்ததே! மேலும், பூரணரான அவருக்கு நம் லஞ்சத்தினாலோ, முகப்புகழ்ச்சியாலோ ஆவது ஏதும் இல்லை.

'அவர் எனக்கு அநுக்ரஹம் பண்ணுவதில்லையே!' என்றால், 'அநுக்ரஹம் பண்ணுபவர்தான் ஈச்வரன். அருள் தருபவர்தான் இறைவன்.' முதலில் இது நமக்கு நன்றாகத் தெரிய வேண்டும்.

'எனக்கு என்ன வேண்டும் என்று எல்லாம் அறிந்த ஆண்டவனுக்குத் தெரியாதா? அவரே கொடுக்கமாட்டாரா?' என்று சிலர் கூறுவார்கள். 'அவருக்குத் தெரியும் என்றால், நீ ஏன் இன்னும் பதவி உயர்வு வாங்காமல் இருக்கிறாய்?'

பதவி உயர்வு வேண்டும் என்ற ஆசை உன்னிடம் இருக்கிறது. அது ஆண்டவனுக்கும் தெரியும். ஆனாலும் உனக்கு பதவி உயர்வு கிட்டவில்லை. அது ஏன்? சற்று சிந்தித்துப் பார். ஆசையும் ஆண்டவன்தான். ஆண்டவனே ஸாதனமாகவும், ஸாத்யமாகவும், அதாவது அடைய வேண்டி பொருளாகவும், அதற்கான வழியாகவும் இருக்கிறார். பதவி உயர்வு இன்னும் வராததால், அதை அடைவதற்கான வழி என்ன என்று ஆராய வேண்டும்.

பூமிக்கு அடியில் நிறைய தண்ணீர் இருக்கிறது. இருந்தாலும் இவனுடைய வயல் காய்ந்து இருக்கிறது. அப்பொழுது இவன் என்ன செய்ய வேண்டும்? அந்த நீரைத் தனக்குப் பயன்படும்படியாக வெளியே கொண்டு வர வேண்டும். அதற்கான செயலைச் செய்ய வேண்டும். முயற்சி செய்ய வேண்டும். முயற்சி செய்தால்தான் பலன் கிட்டும். இவன் முயற்சி செய்கிறான், உடனடியாகப் பலன் கிடைக்கிறது. இப்படி முயற்சிக்குப் பலனைத் தருபவர்தான் ஆண்டவன். இங்கு இந்தப் பலன் த்ருஷ்டமாக இருக்கிறது. ஆண்டவனை இவனால் பார்க்கமுடியவில்லை. ஆதலால், தான்தான் இந்த பலனுக்குக் காரணம் என்று இவன் நினைக்கிறான்.

அந்தந்த ஸாதனத்திற்கு, செயலுக்கு ஏற்ற பலன் இருக்க வேண்டும் என்ற நியதி இருக்கிறதல்லவா? இரண்டு கைகள் இருக்கின்றன. கைகளைத் தட்டினால் சத்தம் வருகிறது. இது ஒரு நியதி. இந்த நியதியை ஸ்ருஷ்டி செய்தவர் ஆண்டவன். அவரே இந்த நியதி ரூபமாகவும் இருக்கிறார். ஃபேனைப் போடுகிறோம். காற்று வீசி வியர்வை தணிகிறது. இதுவும் நியதிப்படி ஏற்படும் த்ருஷ்ட பலனாகும். கிணறு வெட்டுகிறோம் அல்லது 'போர்வெல்' – ஆழ்குழாய் போடுகிறோம். அதற்கான பலன் உடனே த்ருஷ்ட பலனாக, கண்கூடாகக் கிடைக்கிறது.

சில செயல்களுக்கு அத்ருஷ்ட பலன் என்று ஒன்று இருக்கிறது என்று தெரிகிறது. இதுவும் நியதியே. ஆண்டவன் ஒருவர் இருக்கிறார்; அவர் தம் நியதிகளுக்கு ஏற்ப நம்முடைய செயல்களுக்கு அத்ருஷ்ட பலன்களைத் தந்து அவற்றை நம் கணக்கில் வைத்து தக்க

நேரத்தில் நமக்கு அளிக்கிறார் என்ற உண்மையும் நமக்குத் தெரிகிறது. ஆதலால், அவரிடம் பிரார்த்தனை செய்து புண்ய ரூபத்தில் புதிதான அத்ருஷ்ட பலன் ஒன்றை உண்டு பண்ணி அதன்மூலம் நம்முடைய இப்பொழுதைய வாழ்க்கையை மாற்றி அமைக்கப் பார்க்கலாமே! ஆண்டவனின் அருள் என்னும் ஊற்றின் கண்ணைத் திறப்பதற்கான வழிதான் பிரார்த்தனை.

பூஜை முதலிய கர்மங்களுடைய பலன் த்ருஷ்டமாகவும், அத்ருஷ்டமாகவும் இருக்கின்றன. நித்ய கர்மத்தின் மூலம் நாம் அத்ருஷ்ட பலனை உண்டு பண்ணுகிறோம். பழைய துரிதங்கள் அதாவது பாபங்கள் இப்பொழுது இடையூறை, கஷ்டத்தைக் கொடுக்கும் சந்தர்ப்பங்களாக வெளிப்படக்கூடும். அத்தகைய பாபங்களை இந்த அத்ருஷ்டத்தை சம்பாதிப்பதன் மூலம் மாற்றி அமைக்க முயல்கிறோம். அத்ருஷ்ட பலனான புண்யத்தின் மூலம் சில பாபங்களின் வேகத்தைக் குறைக்கலாம். சிலவற்றின் தாக்கத்தை முழுவதாக நாசம் செய்யலாம். தலைக்கு வந்தது தலைப்பாகையுடன் போச்சு என்று சொல்கிறோம் அல்லவா?

ஒரு கதை. இரண்டு சிறுவர்கள் ஏதோ ஓர் ஊருக்குப் போய்க் கொண்டிருந்தார்கள். வழியில் ஒரு கோயில். நம்முடைய கலாசாரத்தில் வழியில் ஒரு கோயில் இருந்தால் அதைப் பார்த்து கும்பிட வேண்டும். நேரம் இருந்தால் உள்ளே போய் கும்பிட வேண்டும்; இல்லாவிட்டால் வெளியிலிருந்தாவது கும்பிட வேண்டும். இவர்களுக்கு நேரம் இருந்தது. இவர்களில் ஒருவன் தனக்குக் கடவுள் நம்பிக்கை இல்லை என்று உள்ளே வராமல் மெதுவாக மேலே நடந்து கொண்டிருந்தான். மற்றவன் நம்பிக்கையுடன் உள்ளே சென்று கும்பிட்டுவிட்டு வந்தான். வெளியே வரும்போது வாசற்படியில் இருந்த ஒரு தேள் இவனுடைய இடதுகால் கட்டைவிரலைக் கொட்டிவிட்டது. இவன் 'ஆ, ஊ' என்று வலியினால் சத்தம் போட்டுக் கொண்டே வந்தான். மற்றவனின் காலிலோ ஒரு காகிதப் பொட்டலம் இடறிற்று. அதைத் திறந்து பார்த்தால் அதில் ஒரு தங்கக் காசு!

என்ன அநியாயம்? கோயிலுக்குப் போனவனுக்குத் தேள்கடி. கோயிலுக்குப் போகாமல் கேலி செய்தவனுக்குத் தங்க நாணயம். இது மாறி நடந்திருந்தால் – கோயிலுக்குப் போனவனுக்குத் தங்கக் காசும், கோயிலுக்குப் போகாமல் கேலி செய்தவனுக்குத் தேள்கடியும் கிடைத்திருந்தால் – இது இறைவனின் நியாயம் என்று சொல்லலாம். மற்றவன் தன் கையில் கிடைத்த தங்கக் காசைக் காட்டி, 'கோயிலுக்குப்

போனதன் பலனையும், போகாததன் பலனையும் பார்த்தியா?' என்று ஏசுகிறான். இவனுக்கோ தேள்கடியின் கடுப்புடன் மற்றவனின் ஏச்சினால் ஏற்படும் மனக்கடுப்பு வேறு.

மேலே போகும் வழியில் ஒரு சாமியாரைப் பார்த்தார்கள். அவரிடம் தேள்கடிக்கு ஏதாவது மருந்து கிடைக்குமா என்று கேட்டார்கள். அவர் பச்சிலைகளைப் பற்றித் தெரிந்த சாமியார். பச்சிலை பறித்து வைத்தியம் செய்தார். இந்தக் கொட்டுக்கு மருந்து வாங்கியாச்சு. இப்பொழுது அந்தக் கொட்டுக்கு மருந்து வாங்க வேண்டுமே! 'சாமி, கோயிலுக்குப் போகாத இவனுக்குத் தங்கக் காசு, கோயிலுக்குப் போன எனக்குத் தேள்கொட்டு. இது என்ன நியாயம்?' என்று இவன் அவரிடம் தன் ஆதங்கத்தை வெளிப்படுத்தினான்.

அவர் ஜோதிடம் நன்கு தெரிந்த சாமியார். இருவருடைய பிறந்த தேதி முதலியவற்றை வாங்கி அங்கேயே ஜாதகம் கணித்தார். அதன்படி இருவருடைய குடும்பத்தைப் பற்றி அவர் சொன்னதெல்லாம் சரியாக இருந்தது. தங்கக் காசு உள்ள பையனிடம் 'உன்னிடம் ஒரு லாட்டரி டிக்கெட் இருக்கிறதா?' என்று கேட்டார். அவன் 'ஆமாம்' என்றான் வியப்புடன்! 'தம்பி! உனக்கு லாட்டரியில் ஜாக்பாட், பம்பர் ப்ரைஸ் கிடைத்திருக்க வேண்டியது. நீ கோயிலுக்குப் போகாததால் அது கிடைக்காமல், உனக்குத் தங்கக் காசு மட்டுமே கிடைத்தது.' என்றார். மற்றவனிடம் 'தம்பி! உனக்கோ உயிருக்கே ஆபத்து விளைவிக்கக்கூடிய பெரிய விபத்து ஒன்று நேர இருந்தது. ஆனால், கோயிலுக்குப் போய் கும்பிட்டதால் அது ஒரு தேள்கடியுடன் போயிற்று!' என்றார்.

க₃ஹநா கர்மணோ **க**₃தி: – கர்மாவின் கதியானது நமக்குச் சரியாகப் புரியாது, புலப்படாது. கூர்ந்து கவனிப்பவர்களுக்குத்தான் அது சிறிதாவது புரியக்கூடும்.

கோயிலுக்குச் செல்கிறோம். கர்ப்பக்ருஹத்தில் ஆண்டவனின் விக்ரஹம் இருக்கிறது. அது கருங்கல்லால் செய்யப்பட்டிருக்கிறது. அத்துடன் எண்ணை பூசி ஒரே கருப்பாக இருக்கிறது. ஒரே ஒரு சிறிய எண்ணெய் விளக்கு மட்டும் அங்கு எரிகிறது. முதலில் ஒன்றுமே கண்ணுக்குத் தெரியவில்லை. அதனால் 'அங்கு ஒன்றுமே இல்லை' என்று சொல்லிவிட முடியுமா? சற்று நேரம் நின்று கூர்ந்து பார்த்தால் இருப்பது தெரியும்.

எல்லா உண்மைகளும் அப்படித்தான். நிதானித்துக் கூர்ந்து பார்த்தால்தான் நமக்குப் புரியும். நன்றாகப் புரிவதற்கு வேறு வெளிச்சம் வேண்டும். அதுதான் கற்பூரம். அதுதான் ஞானம் – சாஸ்த்ர ஞானம். அதைக் காட்டுபவர்தான் குரு. அதனால்தான் கோயிலில் கற்பூர ஜோதியால் இறைவனின் திருவுருவைக் காட்டுபவரை நாம் குருக்கள் என்று குறிப்பிடுகிறோம். இதைத் தெரிந்துகொள்வது மிகப் பெரிய விஷயம். ஆதலால் நாம் பூஜை முதலிய நித்ய கர்மங்களைத் தொடர்ந்து செய்து வர வேண்டும்.

மஹாராஷ்ட்ராவில் ஒரு அரசியல்வாதி இருந்தார். (இப்பொழுதும் இருக்கிறார்.) அவருடைய மனைவி நல்ல கடவுள் பக்தி உடையவள். அரசியல்வாதிகளின் மனைவிகள் எல்லோரும் நல்ல பக்தர்களாகத்தான் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் அவ்வாறான வாழ்க்கையை எல்லாம் தாங்க முடியாது. பக்தர்களாக இருந்தால்தான் பிழைக்கலாம். விடாமல் பூஜை முதலியவற்றை செய்து வந்த அவர் மனைவி இறந்து விட்டாள். அவள் இறந்தவுடன் ‘எனக்கு இனி கடவுள்மீது நம்பிக்கை இல்லை. கடவுளைப் பூஜை செய்ததனால் என்ன பலன்? கடவுளைப் பூஜை செய்யும் இவள் ஏன் இறந்தாள்? கடவுள் என்ன வேண்டி இருக்கிறது?’ என்று இவர் புலம்புகிறார். இத்தகைய பேச்சு மனப்பக்குவமற்ற பேச்சு. கடவுளிடம் கோபம் என்பது நம் பக்குவமின்மையைக் காட்டுகிறது.

கடவுளிடம் பக்தி இருந்ததால்தான் இத்தகைய வாழ்க்கையிலிருந்து அவளுக்கு விடுதலை கொடுத்திருக்கிறார். ‘போதும், நீ இந்த வாழ்க்கையில் திண்டாடியது’ என்று அழைத்துக் கொண்டு விட்டார் போலும்! **க**$_3$ஹநா கர்மணோ **க**$_3$தி: – கர்மாவின் கதி என்பது சாதாரணமாகப் புரியாது.

தினந்தோறும் பூஜை செய்யும்போது, ‘மம உபாத்த–**து**$_3$ரித–க்ஷயார்த$_2$ம் – என்னுடைய பழைய பாபங்கள் விலகும் பொருட்டும், பரமேஶ்வர–ப்ரீத்யர்த$_2$ம் – இறைவனின் அநுக்ரஹத்தை அடையும் பொருட்டும், பூஜாம் கரிஷ்யே – நான் இந்தப் பூஜையைச் செய்கிறேன்’ என்று சொல்கிறோம். இது ஸங்கல்பம் எனப்படும்.

பக்தி உணர்வை வெளிப்படுத்துவதே பூஜை

தினந்தோறும் பூஜை செய்வது முதலியவற்றை நாம் பக்தி என்று சொல்கிறோம். பக்தி என்பது உள்ளே இருக்கும் உணர்வு. அந்த உணர்வு வ்யக்தமாகும்போது, அதாவது வெளிப்படும்போது

ஸேவை செய்கிறோம், அதாவது செயலில் நம் பக்தியை வெளிப்படுத்துகிறோம். உள்ளே இருக்கும் பக்திக்குப் பலன் இல்லை, செயலில் வெளிப்படும் பக்திக்குத்தான் பலன். அதாவது உள்ளே இருக்கும் பக்திக்கு த்ருஷ்ட பலன் மட்டுமே. செயலில் வெளிப்படும் பக்திக்குத்தான் அத்ருஷ்ட பலன்!

வெறும் எண்ணங்களுக்குப் பலன் இல்லை, செயலுக்குத்தான் பலன். மனதினால் நாம் செயல் செய்யலாம். அப்பொழுது அது மானஸ கர்ம, மானஸ ஜபம் எனப்படும். ஆனால் வெறுமே தோன்றி மறைகிற எண்ணத்திற்கு, அது நல்லதோ, தீயதோ, அதற்குப் பலன் இல்லை. எண்ணங்கள் தொடர்ந்து இருந்து அவை நம்முடைய செயலுக்குத் தூண்டுதலாக, காரணமாக அமையலாம். எண்ணத்தை ஒட்டி வெளிப்படும் கார்யத்திற்குத்தான் அது நல்லதா, கெட்டதா என்பதைப் பொறுத்துதான் பலன்.

எண்ணங்கள் மட்டுமே பலனைக் கொடுத்துவிடும் என்றால் எல்லோருமே பணக்காரர்களாகத்தான் இருப்பார்கள், ஏழைகளே இருக்கமாட்டார்கள். எல்லோருமே எனக்கு நிறைய பணம் வேண்டும் என்றுதானே எண்ணுகிறார்கள்! எண்ணங்களெல்லாம்–அவை நல்லவையோ, கெட்டவையோ–பலனாக மாறுவதில்லை. செயலுக்குத் தான் பலன். அங்குதான் தர்மம், அதர்மம் என்று சொல்ல முடியும்.

தினந்தோறும் செய்யும் கர்மங்கள் நித்யம் என்றும், ஏதோ ஒரு நிமித்தத்தை – காரணத்தை ஒட்டிச் செய்யப்படும் செயல்கள் நைமித்திகம் என்றும் சொல்லப்படும். இவை நம்முடைய துரிதங்களை, பாபங்களைப் போக்குவதற்காக ஏற்பட்டவை. இவை பூஜை வடிவமாகவும், ஜபம், பாராயணம், தியானம் முதலிய ரூபங்களாகவும் இருக்கின்றன. இவற்றுக்கு த்ருஷ்ட பலன், அத்ருஷ்ட பலன் இரண்டும் உண்டு. ஒருவர் பக்தி செய்கிறார் என்றால், அவர் இம்மாதிரியான பக்தியை வெளிப்படுத்தும் கர்மங்களைச் செய்கிறார் என்று அர்த்தம்.

மனத்தூய்மைக்கான பக்தி பூர்வ செயல்கள்

தினந்தோறும் நாம் செய்யக்கூடியவை நித்ய கர்மம் எனப்படும். நித்ய கர்மம் என்பது எதற்காக? நாம் தினந்தோறும் உபயோகிக்கும் பொருள்கள் எல்லாம் அழுக்கடைகின்றன. அவற்றை நாம் சுத்தம் செய்ய வேண்டும். இது த்ருஷ்ட பலன். இந்த தேகத்தை நாம் தினந்தோறும் பயன்படுத்துகிறோம். அதனால் அது அழுக்கடைகிறது. அதைப் பயன்படுத்தாமல் டீப் ஃப்ரீஸரில் வைத்துவிட்டால் அழுக்கடையாது. அதனால் குளிக்க வேண்டாம். ஆனால் இதை

தினம் பயன்படுத்துகிறோமே! வெளியே போய் வந்தாலும் சரி, உள்ளேயே இருந்தாலும் சரி, உடல் அழுக்கடைகிறது. அதனால்தான் தினந்தோறும் குளிக்கிறோம். போனவாரம்தானே குளித்தேன், நேற்றுதானே குளித்தேன். இன்று ஏன் குளிக்க வேண்டும் என்று கேட்க முடியாது. தினமும் மும்முறை ஸ்நானம் பண்ணுபவர்கள் இருக்கிறார்கள். குளிக்காமல் இருப்பது என்பது இந்த தேசத்தில் கிடையாது. குளிர் பிரதேசங்களில், தண்ணீர் இல்லாத பிரதேசங்களில் ஒரு வாரத்திற்கு ஒரு முறை குளிப்பவர்கள் உண்டு. அங்கும் தேகம் நாறக்கூடும் என்று சென்ட் பயன்படுத்துவார்கள்.

அவ்வாறே தினந்தோறும் உடைகளை மாற்றுகிறோம், துவைத்துக் கட்டுகிறோம். சாப்பிட்ட பாத்திரங்களைச் சுத்தம் செய்கிறோம். அடுத்த வேளையும் சாப்பிடப் போகிறோமே என்று அதை சுத்தம் செய்யாமல் இருக்க முடியுமா? வெறும் தண்ணீர் மட்டும் போட்டு சுத்தம் செய்தால் போதாது. வெந்நீர் போட்டும், சோப் போட்டும் சுத்தம் செய்ய வேண்டும். (சிலர் இதை எல்லாம் செய்துவிட்டு பிறகு ஓர் அழுக்குத் துணியை வைத்துத் துடைத்து விடுவார்கள்.) இவ்வாறே அன்றாடம் பயன்படுத்தும் வீட்டையும் பெருக்கித் துடைக்கிறோம்.

ஆகவே, எதை எல்லாம் நாம் அடிக்கடிப் பயன் படுத்துகிறோமோ, அதை எல்லாம் அன்றாடம் சுத்தம் செய்ய வேண்டும். நம்முடைய மனதையும் அன்றாடம் பயன் படுத்துகிறோம். மனதை மையமாக வைத்து நமக்கு ஏற்படக்கூடிய சில அசுத்தங்கள் இருக்கின்றன. 'மனதை மையமாக வைத்து நமக்கு ஏற்படக்கூடிய' என்று கூறுவது கவனிக்கத்தக்கது. நம் மனதில் பொறாமை, ராக, த்வேஷங்கள், கோப, தாபங்கள் என்ற அசுத்தங்கள் சேர்ந்துகொண்டே இருக்கின்றன. இந்த அசுத்தங்களை எல்லாம் அன்றாடம் போக்கிக் கொள்ள வேண்டும். இவற்றைப் போக்கவில்லை என்றால், அவை உள்ளுக்குள்ளேயே சேர்ந்து, சேர்ந்து மனதையே புரட்டிப் போட்டு விடும். ஆசாமி குணமே மாறிவிட்டான் என்று சொல்கிறோம் அல்லவா!

பக்திதான் மனக்காயத்திற்கான மருந்து

மேலும், நாம் பலருடன் சேர்ந்து பழக வேண்டும் என்னும்போது, நம் மனதில் *hurt* – காய உணர்வு ஏற்படுவதைத் தடுக்க முடியாது. அதை எப்படிப் போக்கிக் கொள்வது? வெளிக் காயங்களுக்கு மருந்து போடலாம், பிளாஸ்த்ரி போடலாம். உள்ள இருக்கும் காயத்திற்கு என்ன செய்வது? இதற்கு என்ன மருந்து?

இதற்கு பக்தி என்பதுதான் மருந்து இந்த மருந்தைத் தவிர வேறு மருந்து கிடையாது! பக்தியினால் செய்யக்கூடிய பிரார்த்தனை முதலிய செயல்கள்தான் மருந்து. எப்படி பக்தியினால் செய்யும் செயல்களுக்குப் பழைய பாபங்களைப் போக்குகிற சக்தி இருக்கிறதோ, அவ்வாறே த்ருஷ்ட பலனாக இருக்கும் துக்கத்தையும் போக்கக்கூடிய சக்தியும் இருக்கிறது. ஈஶ்வர-அநுக்$_{3}$ரஹார்த$_{2}$ம், பரமேஶ்வர-ப்ரீத்யர்த$_{2}$ம் என்று சொல்வதன் அர்த்தம் இதுதான். ‘இறைவனின் அனுக்ரஹத்தினால் இப்பொழுது த்ருஷ்டமாக ஏற்பட்டுள்ள என் துக்கம் போவதற்கும், பழைய பாபங்களின் தாக்கம் குறைவதற்கும் நான் இந்த நித்ய கர்மங்களை, நைமித்திக கர்மங்களைச் செய்கிறேன்’ என்று பூஜைக்கு முன்பு கூறுகிறோம். ‘எனக்கு இவை வேண்டும்’ என்ற ஸங்கல்பத்துடன் செய்யும்போது அவை காம்ய கர்மங்கள் அதாவது ஆசையைப் பூர்த்தி செய்வதற்கான செயல்கள் ஆகின்றன. அதுவும் பக்தியினால் செய்வதுதான். நாம் செய்த omissions and commissions - செய்யாமல் விட்டவை, தவறாகச் செய்தவை என்ற தவறுகளைச் சரி செய்வதற்காக பிராயச்சித்த கர்மங்கள் உள்ளன.

ஒரு செயலுக்குப் பதிலாக வேறொரு செயல்

வேதம் பலவிதமான பிராயச்சித்த கர்மங்களைக் கூறுகிறது. வேதம் கூறும் கர்மங்களில் பெரும்பாலானவை அக்னியில் செய்ய வேண்டியவைகளாக உள்ளன. அதற்கான சில ஆசாரங்கள் உள்ளன. குறிப்பிட்ட மந்த்ரங்கள் உள்ளன. அவற்றைச் சரியாக உச்சரித்து, சரியான ஏற்ற, இறக்கங்களுடன், ஸ்வரம் மாறாமல் சொல்ல வேண்டும். இல்லாவிடில் சில இடங்களில் மந்த்ரங்களின் அர்த்தமே மாறிவிடும். இவற்றை எல்லோரும் செய்ய முடியாது. ஆனால் இது கர்மம் என்பதால், அந்யதா$_{2}$ வா கர்த்தும் ஶக்யம் – வேறுவிதமாகவும் செய்யலாம்.

ஒருவர் தன் வீட்டில் ஒரு பூஜை செய்கிறார். அதை நடத்தித் தருவதற்காக புரோஹிதர் வருகிறார். பூஜையின் உபசாரங்களில் பகவானுக்கு வஸ்த்ரம், ஆபரணம், உபவீதம் (பூணூல்) முதலியவற்றை அளிக்க வேண்டும். அவை அங்கு இல்லை. அப்பொழுது அந்தப் புரோஹிதர் இவர் கைகளில் அக்ஷதைகளைக் கொடுத்து, வஸ்த்ரார்த$_{2}$ம் அக்ஷதாந் ஸமர்ப்பயாமி, உபவீதார்த$_{2}$ம் அக்ஷதாந் ஸமர்ப்பயாமி, ஆப$_{4}$ரணார்த$_{2}$ம் அக்ஷதாந் ஸமர்ப்பயாமி என்று சொல்லி அவற்றுக்கு பதில் அக்ஷதையைப் போடச் சொல்கிறார். (அக்ஷதை – மஞ்சள் தடவியதும், உடையாததுமான அரிசி.) இதைப் பார்த்துக் கொண்டே வந்த இவர், ஒரு பொருளுக்குப் பதிலாக அக்ஷதையைப்

பயன்படுத்தலாம் என்பதைக் கற்றுக்கொண்டார். பூஜை முடிந்துவிட்டது. புரோஹிதருக்கு தக்ஷிணை தர வேண்டும். இப்பொழுது இவர் புரோஹிதர் பக்கத்தில் வந்து **த**$_3$க்ஷிணார்த$_2$ம் *அக்ஷதாந் ஸமர்ப்பயாமி அதாவது தக்ஷிணைக்கு பதிலாக அக்ஷதையை அளிக்கிறேன் என்று கூறி அவர் தலையில் அக்ஷதையைப் போடுகிறார். அது சரி அல்ல; ஏனென்றால் புரோஹிதர் ஆண்டவன் அல்ல. அதனால் அவருக்குக் கொடுக்க வேண்டியதை முறையாகக் கொடுக்கவேண்டும். பகவானுக்குச் செய்யும்போது ஒரு செயலுக்கு மாற்றாக மற்றொன்றைச் செய்யலாம், ஒரு பொருளுக்கு பதிலாக – அதைக் கொடுக்க முடியாதபோது – மற்றொன்றைக் கொடுக்கலாம். அங்கு மனோபாவம்தான் முக்கியம்.*

மனோபாவத்தின் அடிப்படையில் பார்க்கும்போது எல்லா விதமான பிரார்த்தனைகளும் சரியானவைதான். இருந்தாலும் சில நியமங்கள் இருக்கின்றன. கோயிலில் கும்பிடும்போது அங்கு பிரதிஷ்டை செய்யப்பட்ட முறையை ஒட்டி, ஆகம விதிகளை ஒட்டி சில நியமங்கள் உள்ளன. அவ்வாறுதான் அங்கு செய்ய வேண்டும். வைதிக கர்மங்களையும் அவற்றுக்கான வழிமுறைப் படிதான் செய்ய வேண்டும். பிரார்த்தனை என்பதை எப்படி வேண்டுமானாலும் செய்யலாம் என்றாலும், ஆகம கர்மங்கள், வைதிக கர்மங்கள் என்றால் அவற்றைச் செய்ய வேண்டிய முறைப்படித்தான் செய்ய வேண்டும். அப்படிச் செய்யா விட்டால் பலன் ஏற்படாது என்பது மட்டுமல்ல; சில நேரங்களில் விபரீத பலனும் ஏற்படலாம். வைதிக கர்மங்களைச் சரியாகச் செய்ய முடியாதவர்களுக்கு இவை எல்லாம் வேண்டாம் என்பதால், பூஜை என்பதாக மாற்றி வைத்து விட்டார்கள். இது ஸ்மார்த்த கர்மம் எனப்படும்.

கலௌ கல்மஷ-சித்தாநாம் பாப**த்**$_3$ரவ்யோபஜீவிநாம்
வி**தி**$_4$க்ரியா-விஹீநாநாம் ஹரேர் நாமைவ கேவலம்

கலியுகத்தில் மனிதர்கள் 'வி**தி**$_4$க்ரியா-விஹீந'*ர்களாக – வேதத்தில் கூறியுள்ள கர்மங்களை அதில் கூறியுள்ளவாறே செய்ய முடியாதவர்களாக இருக்கிறார்கள். மேலும்* 'பாப**த்**$_3$ரவ்ய- உபஜீவி'*கள் ஆகவும் இருக்கிறார்கள். தினந்தோறும் நாம் செய்யும் கர்மங்கள் பாபத்துடன் சேர்ந்ததாக உள்ளன. யாரையாவது, எதையாவது துன்புறுத்தித்தான் சம்பாதிக்கிறோம். எங்காவது இன்டர்வ்யூக்கு செல்கிறோம். ஒருவருக்கு வேலை கிடைத்தால் மற்றவர்கள் துக்கம் அடைகிறார்கள். போட்டி என்றாலே அதில் வெல்லாதவர்களின் மனதைப் புண்படுத்தாமல் வெல்ல முடியாது. ஆதலால்தான் ஸாதுக்கள் போட்டி இடுவதில்லை. இவற்றை எல்லாம் பிரார்த்தனையால்தான் போக்கிக் கொள்ள முடியும். அந்தக்*

காலத்தில் நெல்லைக் குத்துவார்கள். அது குட்டநம் எனப்படும். அதில் உள்ள எறும்பு, வண்டு முதலியவையும் குத்தப்பட்டு சாகின்றன. விறகை எரிக்கும்போது அதில் உள்ள கறையான் முதலியவை சாகின்றன. அதே மாதிரியே வீட்டைப் பெருக்கும்போது, மாவு அரைக்கும்போது பல பூச்சிகள் சாகின்றன. இவை நமக்கு சிறு சிறு பாபங்களைத் தருகின்றன.

இந்த பாபங்கள் தவிர்க்க முடியாதவைகளாக இருப்பதால், இவற்றைப் போக்கிக்கொள்ள என்ன செய்ய வேண்டும்? இதற்குத்தான் நித்ய கர்மங்களைச் செய்ய வேண்டும். அவற்றில் காக்கைக்கு சாதம் போடுதல், எறும்புக்கு உணவாகும் பொருட்டு கோலம் போடுதல் என்றவைகளும் அடங்கும். இது '**பூ**$_4$தயஜ்ஞ'ம் எனப்படும். கோலம் என்பது அரிசி மாவினால்தான் போடப்பட வேண்டும். அதுவும் அந்த மாவு நைசாக இல்லாமல், கொற, கொற என்று இருக்க வேண்டும். அப்பொழுதுதான் அதை எறும்புகள் உண்ண முடியும், சிறிய பறவைகளும் உண்ண முடியும். இன்றும் சென்னையில் காலையில் 'மொக்குமாவு' என்று சுண்ணாம்புப் பொடி விற்கப்படுகிறது. எறும்புகள் பாவம், இவர்கள் அரிசி மாவினால் கோலம் போடுகிறார்கள் என்று நினைத்து சாப்பிட்டு விட்டால் அவை செத்துவிடும். ஆதலால் அரிசி மாவினால்தான், அதுவும் மண்ணோடு ஒட்டும்படி இல்லாத மாவினால்தான் போட வேண்டும். அப்பொழுதுதான் அது பூத யஜ்ஞமாகும்.

நம்முடைய பாபங்கள் நீங்குவதற்காகத்தான் இவற்றைச் செய்கிறோம் என்பதால், இதில் நமக்கு விரயம், செலவு இருக்க வேண்டும். அதனால்தான் தானம் என்பதும் சொல்லப் பட்டிருக்கிறது. புண்யஸ்தலங்கள், தீர்த்தங்கள் இவற்றுக்குப் போகும்போது தானம் செய்வது, கிரஹணம் முதலிய புண்ய காலங்களில் தானம் செய்வது என்பதெல்லாம் நம் கலாசாரத்தில் பழக்கமாக உள்ளது. நம்முடைய பாபங்களைப் போக்கிக் கொள்வதற்கு தினந்தோறும் செய்ய வேண்டிய கர்மங்களைச் செய்தாலும், மீதி இருக்கும் பாபங்களைப் போக்கிக் கொள்வதற்கு நம்பிக்கையுடன் தானம் செய்ய வேண்டும். அத்தகைய தானத்தால் அந்தப் பாபங்கள் தொலைகின்றன.

பாபபுண்யத்தை நம்புவது மூடநம்பிக்கை அல்ல

ஒரு செயல் தவறு என்பது மனிதர்களுக்குத் தெரியும். ஆனால் 'இதனால் எனக்கு பாபம் என்ற அத்ருஷ்ட பலன் வரும்' என்பது நம்பிக்கைக்குரிய விஷயம். இது மூட நம்பிக்கை அல்ல.

மூட நம்பிக்கை என்பது 'நான் ஆண்டவனால் உங்களை ரக்ஷிப்பதற்காக அனுப்பப்பட்டேன்' என்று சொல்பவரை நம்புவதுதான். ஏனென்றால் மற்றவரும் இதையே சொல்கிறார். தாமும் ஆண்டவனால் அனுப்பப்பட்டவர் என்று மக்கள் நம்ப வேண்டும் என்பதற்காக இரண்டாமவர் 'அவர் அனுப்பப்பட்டார் என்பது உண்மைதான். ஆனால் நான்தான் *latest*. அது மட்டுமல்ல *last*-உம்கூட, அதாவது நான்தான் புதிதாக வந்தவன், கடைசியாக வந்தவனும்கூட; எனக்குப் பின்னால் எவரையும் ஆண்டவன் அனுப்பமாட்டார்' என்று கூறுகிறார்.

ஒரு முறை நான் கீழ்பாக்கம் ஆஸ்பத்திரிக்குப் போயிருந்தேன். நோயாளியாக அல்ல, ஒருவரைப் பார்ப்பதற்காக. இது பெரிய, பழைய ஆஸ்பத்திரி. பழைய ஆஸ்பத்திரி என்பதால் அங்கு பெரிய காம்பௌண்ட், பெரிய மரங்கள் இருந்தன. நான் போனது காலை 6 மணிக்கு. அப்பொழுது காக்கை முதலிய பறவைகள் எல்லாமும் பறந்து போய்விட்டன. அங்கு ஒருவரையுமே காணோம். பிறகு பார்த்தால் ஒரு மரத்தடியில் ஒரு மனிதன் மிக சத்தமாகப் பேசிக் கொண்டிருக்கிறான். தெருவில் எல்லாம் பெரிய மேடை போட்டுக்கொண்டு கையில் மைக்கை வைத்துக் கொண்டு – கேட்பதற்கு யாரும் இல்லை என்றபோதும் – சத்தமாகப் பேசிக் கொண்டிருப்பார்களே அது மாதிரி. இவர்களை எல்லாம் கட்சிப் பேச்சாளர்கள் என்று சத்தம் போடுவதற்காகவே பணம் கொடுத்து வைத்திருப்பார்கள் போலும். இவனும் அங்கு ஆட்களே இல்லாதபோதும் பெரிய கூட்டம் இருப்பதுபோல் உரக்கக் கத்திக் கொண்டிருக்கிறான்.

'நான் ஆண்டவனால் அனுப்பப்பட்டவன்; உங்கள் எல்லோருக்கும் பாவமன்னிப்பு கொடுப்பதற்காக அனுப்பப் பட்டவன். உங்கள் எல்லோருடைய பாவங்களையும் மன்னித்து ஸ்வர்க்கத்திற்கு அனுப்புவோம். நீங்கள் பாவ மன்னிப்பு கேட்கத் தயாரா?' நான் இவருக்குப் பின்புறம் நின்றுக் கொண்டிருக்கிறேன். அவர் தன் இடது பக்கம், எதிரில், வலது பக்கம் என்று ஒவ்வொரு இடமாகப் பார்த்து, 'நீங்கள் தயாரா?' என்று கேட்டுவிட்டு, 'தாங்க்யூ, தாங்க்யூ' என்று கூறுகிறார். ஆளே கிடையாது. இவர் கற்பனையிலேயே அனைவரையும் பார்க்கிறார்.

திடீரென்று மேலே இருந்து ஓர் அசரீரி வாக்கு, அதாவது மனிதனே தென்படாமல் சத்தம் மாத்திரம் வருகிறது. 'நான் ஆண்டவன் பேசுகிறேன். இவனை நான் கீழே

அனுப்பவில்லை.' என்ற சத்தம் வருகிறது. மேலே கூர்ந்து பார்த்தால் மரத்தின் மேலிருந்து ஒருவன் பேசிக் கொண்டிருக்கிறான். (இது நானாக இட்டுகட்டிய கதை)

இவ்வாறுதான் பலர் நம்மிடம் 'நான் ஆண்டவனால் அனுப்பப்பட்டவன், நான் கடவுளின் விசேஷ தூதன், நான் காட்டும் வழிதான் சரியானது, என்னையே பின்பற்றுங்கள்' என்று கூறுகிறார்கள். மற்றொருவர் சொல்கிறார், 'தினமும் கடவுள் என்னிடம் கனவில் பேசுகிறார்' என்று. இவை எல்லாம் ஆதாரமற்ற நம்பிக்கைகள். ஆனால் அதை உண்மை என்று நம்புவதுதான் மூட நம்பிக்கை. வீட்டில் உங்கள் துணைவரோ, அல்லது மிகவும் நெருங்கியவரோ இம்மாதிரி பேசினால், 'ஐயோ, பாவம் என்ன ஆச்சு இவருக்கு?' என்று நினைப்பீர்கள்.

ஆனால் நம் செயலுக்கு அத்ருஷ்ட பலனாக புண்யம், பாபம் இவை உள்ளன என்பது நம்பிக்கை என்றாலும் இது ஆதாரமற்ற நம்பிக்கை அல்ல. ஏனென்றால் தர்மம், அதர்மம் என்பது எல்லோராலும் உணரப்படுகிறது, எல்லோருக்கும் பொதுவானது. ஆதலால், *the law will take care of the result* - செயலின் நியதிகள் கட்டாயம் பலனை அளித்தே தீரும். *When you rub against a law you will get rubbed by the law* – ஒரு நியதிக்கு எதிராக நாம் இயங்கினால் அந்த நியதி நமக்கு அதற்கு ஏற்ற விளைவைத் தராமல் இருக்காது. சாஸ்த்ரம் கூறுவதை ஒப்புக்கொள்வதற்கு வேண்டிய லாஜிக், தர்க்கரீதியான காரணகார்ய சம்பந்தம் நமக்கு இருக்கிறது.

கலியுகத்தில் பகவானின் நாமமே கதி

இந்தக் கலியுகத்திலோ பாப வழிகளில் சம்பாதிப்பதையோ, நடப்பதையோ தவிர்க்க முடிவதில்லை. வேதம் கூறும் கர்மங்களை, பிராயச்சித்த கர்மங்களை நியமப்படிச் செய்யவும் முடிவதில்லை. பெரியோர்கள் எல்லோரும் வைதிக கர்மங்களைச் செய்யவேண்டும் என்று சொல்கிறார்கள். ஆனால், அவற்றைச் செய்வதற்கு ஏற்ற சூழ்நிலை என்று கருதக்கூடிய இடங்களில் உள்ளவர்களாலேயே அவற்றைச் செய்ய முடிவதில்லை. தினப்படி செய்யவேண்டிய ஸந்த்யாவந்தனங்களையே பலரால் செய்ய முடிவதில்லையே! அதில் தப்பேதும் இல்லை. ஆனால், அதற்குப் பதிலாக அவர்கள் பூஜை முதலிய வேறு ஏதாவது கர்மங்களையாவது செய்கிறார்களா என்று பார்க்க வேண்டும்.

ஹரேர் நாமைவ கேவலம் – இறைவனின் நாமம் மட்டுமே நமக்கு கதி. இந்தக் கலியுகத்தில் நம் பாபங்களைப் போக்கும்

ஸாமர்த்தியம் ஹரியின், ஆண்டவனின் நாமத்திற்கு உள்ளது. நாமம் என்று சொல்லும் போது நாம் 'அச்யுதாய நம:, அநந்தாய நம:, **கோ**₃விந்**தா**₃ய நம:' என்று சொல்லி பூஜையில் அர்ச்சனை செய்யும் போதும் அவர் நாமத்தைச் சொல்கிறோம். ஜபம் செய்யும்போது, பாராயணம் செய்யும்போது, பஜனை செய்யும்போதும் இறைவனுடைய நாமத்தையே சொல்கிறோம். இவை எல்லாமே நம்முடைய பாபங்களை நீக்குவதற்குப் போதுமானது என்று சொல்லப்படுகிறது.

'ந வாரிணா ஶு**த்**₄யதே அந்தராத்மா' – மனதை நீரினால் சுத்தம் செய்ய முடியாது. தினந்தோறும் மனதில் பல அழுக்குகளைச் சேர்த்துக்கொள்கிறோம். அந்த அழுக்கை நாம் அன்றாடம் பக்தி பூர்வமான செயல்களால், நித்ய நைமித்திக கர்மங்களால் நீக்கிக் கொள்ள வேண்டும். ஆசைகளை தர்ம வழியில் பூர்த்தி செய்து கொள்வதற்காக உள்ளவை காம்ய கர்மங்கள். செய்த தவறுகளை சரி செய்வதற்காக பிராயச்சித்த கர்மங்கள். நித்ய கர்மங்கள், நைமித்திக கர்மங்கள், காம்ய கர்மங்கள், பிராயச்சித்த கர்மங்கள் என்று இவ்வாறு நான்கு வித கர்மங்கள் உள்ளன. அவற்றை நாம் உடலாலும், வாக்கினாலும், மனதாலும் செய்கிறோம். அவை காயிக, வாசிக, மாநஸ எனப்படும். இதைத்தான் நாம் 'காயேந, வாசா, மநஸா' என்று சொல்கிறோம். தமிழிலும் உடலைக் காயம் என்று சொல்கிறோம்.

மனம், வாக்கு, உடல் மூன்றினாலும் செய்யப்படுவது பூஜை முதலியவை. இவற்றில் உடல் பிரதானம் என்பதால் இது காயிக கர்மம் எனப்படும். பஜனை, ஜபம், பாராயணம் என்பவை மனம் கூடிய வாக்கினால் செய்யப்படுவதால் வாசிக கர்மம் எனப்படும். தியானம் முதலியவை மனதினால் மட்டும் செய்யப்படுவதால் மாநஸ கர்மம் எனப்படும். இந்த மூன்றுவித செயல்களும் பக்தி பூர்வமாகச் செய்யப்படுகின்றன. ஆதலால் மனதில் பக்தி என்ற உணர்வுடன், பக்திபூர்வமாக செய்கிறோமே அன்றி பக்தியைச் செய்ய முடியாது.

பக்தி என்பது ஒரு தனி யோகம் அல்ல

பக்தியைப் பற்றி எவ்வளவு வேண்டுமானாலும் பேசலாம். இங்கு ஒன்றை நான் முக்கியமாகச் சொல்ல விரும்புகிறேன். சிலர் 'சாமி, நீங்கள் என்ன யோகம் சொல்கிறீர்கள், ஞானயோகமா, ராஜயோகமா, பக்தியோகமா, கர்மயோகமா?' என்று என்னைக் கேட்பார்கள். மற்றும் சிலர் ரொம்பவும் உணர்ச்சி வசப்படுபவர்களுக்கு பக்தியோகம்; பகுத்தறிவு அதிகம் உள்ளவர்களுக்கு ஞானயோகம்; ரொம்பவும் extrovert-ஆக அதாவது

வெளி உலகத்தில் ஏதாவது துறுதுறுவென்று செய்ய வேண்டும் என்று இருப்பவர்களுக்குக் கர்மயோகம்; ஒன்றுக்குமே சரி இல்லாதவர்களுக்கு ஹடயோகம் என்று சொல்வார்கள். இது எந்த சாஸ்த்ரத்திலும் கூறப்பட்டதாக எனக்குத் தெரியவில்லை. சாஸ்த்ரத்தில் கூறப்படவில்லை என்றாலும், அதற்கு ஆதாரம் இருப்பதாகக் காட்டினால் நான் ஒப்புக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். ஆனால் அவர் சொன்னார், இவர் சொன்னார் என்ற ஒரே காரணத்திற்காக ஒப்புக் கொள்ள முடியாது.

சிறிது சிந்தித்துப் பார்க்கலாம். யாருக்குத்தான் உணர்ச்சிகள் இல்லை? 'ஆனாலும் இவர் அதிக உணர்ச்சிவசப்படுகிறாரே!' என்றால், அவருக்கு ஞானத்தை, அறிவைக் கொடுங்கள். அப்பொழுது அவர் தன் உணர்ச்சிகளைச் சமாளிக்கக் கற்றுக் கொள்வார். யாருக்குத்தான் ஞானத்தில் இஷ்டம் இல்லை? மேலும் ஏதோ ஓர் அடிப்படையில் பிரிப்பதே அறிவுதானே.

மற்றும் சிலர் 'கலியுகத்தில் பக்திதான் பெரியது, ஆதலால் பக்தி செய்ய வேண்டும்' என்று அடித்துச் சொல்வார்கள். நான் அவர்களைக் கேட்கிறேன், 'பகவந்நாமாவைச் சொல்லுங்கள்.; பூஜை செய்யுங்கள். ஏன் பேசுகிறீர்கள்?' வாதத்தோடு அடித்துப் பேச முயல்வதே உணர்ச்சியைக் காட்டவில்லை, அறிவைத்தான் காட்டுகிறது. எல்லோருமே *intellectual*-தான். ஏனென்றால், படித்தவர், படிக்காதவர் எல்லோருமே கேள்வி கேட்கக் கூடியவர்கள்தாம். கேள்வி கேட்காவிடிலும் உள்ளே கேள்வி எழத்தானே செய்கிறது. கேள்வி கேட்பதற்குச் சிலர் கூச்சப்படலாம். தாம் கேட்பது சரியா, தவறா என்ற சந்தேகத்தினால் கேட்காமல் இருக்கலாம். நம்மைப் பற்றி என்ன நினைப்பார்களோ என்ற சங்கோசம் ஏற்படலாம். ஆனால் உள்ளே கேள்வி எழுவதைத் தடுக்க முடியாது. பஜனை செய்யும் போதே 'எதற்காக பஜனை செய்கிறோம்?' என்ற கேள்வி எழலாம்.

எல்லோருக்குமே பக்தி அவசியம்

ஆதலால், புத்தி, பகுத்தறிவு என்று ஆண்டவன் கொடுத்தது எல்லோருக்கும் இருப்பதால் கேள்விகள் எழத்தானே செய்யும்? அதே மாதிரி மனம் இருப்பதால் எல்லோருக்கும் உணர்ச்சிகள் இருக்கத்தான் செய்யும். இவைகள் இல்லாத மனிதர்ளே இல்லை. ஆனால் சிலருக்கு அடக்க முடியாத சில உணர்ச்சிகள் இருக்கலாம். அதற்கு ஏதோ சில பின்னணிகள் இருக்கலாம். அவற்றைச் சரி செய்ய வேண்டும்.

சரி, உணர்ச்சிகள் என்றால் என்ன? அன்பா? பரிவா? கருணையா? இவைதாம் என்றால் இவை எல்லாம் பக்தனின்

குணங்கள். மனத்தளர்வு, சோகம், கோபம் இவைதான் உணர்ச்சிகள் என்றால், இத்தகைய உணர்ச்சிகள் உள்ளவர்களுக்கு பகவானிடம் பக்தியே வராது, 'எனக்கு ஏன் இதைக் கொடுத்தான்?' 'என்னை ஏன் இப்படி வைத்திருக்கிறான்?' என்று கோபம்தான் வரும்.

உணர்ச்சி, பக்தி, ஞானம் இவை எல்லோருக்குமே இருக்கக் கூடியவைதாம். ஆதலால் கீதையில் பகவான் என்ன சொல்கிறார் என்றால், 'லோகே அஸ்மிந் **த்**$_3$விவி**தா**$_4$ நிஷ்டா$_2$' – 'இந்த உலகத்தில் ஆண்டவனை அடைவதற்கும், ஆண்டவனான என்னைத் தெரிந்து கொள்வதற்கும், தன்னையே ஒருவர் தெரிந்து கொள்வதற்கும், மோக்ஷம் அடைவதற்கும் இரண்டு விதமான வாழ்க்கை முறைகள்தான் உள்ளன என்று கூறுகிறார். (கீதை 3-3) இறைவனை அடைவது, இறைவனை அறிவது, தன்னை அறிவது, மோக்ஷம் அடைவது என்ற நான்கும் ஒன்றுதான், நான்கின் தாத்பர்யமும் ஒன்றுதான். ஆகவே பகவான் கிருஷ்ணர் கீதையில் கூறும் வாழ்க்கை முறைகள், யோகங்கள் இரண்டுதானே அன்றி நான்கு அல்ல.

இந்த இரண்டு நிஷ்டைகள் எவை? 'ஜ்ஞாந-யோ**கே**$_3$ந ஸாங்க்$_2$யாநாம், கர்ம-யோ**கே**$_3$ந யோ**கி**$_3$நாம்' – ஸாங்க்யர்களுக்கு, அதாவது மோக்ஷத்தை, ஞானத்தை அடைய வேண்டும் என்ற ஒரே குறிக்கோளுடன் யார் எல்லாவற்றையும் துறந்து துறவறம் பூண்டிருக்கிறார்களோ அவர்களுக்கு ஞானம்தான் யோகம். ஏனென்றால் அவர்களுக்கு கடமைகள் ஏதும் இல்லை. தினந்தோறும் செய்ய வேண்டிய நித்ய, நைமித்திக கர்மங்கள், குடும்பத்திற்காகச் செய்ய வேண்டிய கர்மங்கள் இல்லை. ஆதலால், அவர்களுக்கு ஞானம் ஒன்றே வாழ்க்கை முறை. இவருக்கும் பக்தி உண்டு. பக்தி இல்லாத ஸந்ந்யாஸி என்றாலே தகராறுதான். கடவுளுடைய அருளினால்தான் அவர் ஸந்ந்யாஸம் மேற்கொண்டிருக்கிறார். பக்தி இருந்தால்தான் ஞானத்தின் பலன் கிடைக்கும். ஆதலால் ஞானத்தை மட்டுமே தன் முழுக் குறிக்கோளாக வைத்திருக்கும் ஸாங்க்யர்களுக்கு, ஸந்ந்யாஸிகளுக்கு ஞானம் மட்டுமே யோகம்.

கர்மயோகிகளும் பக்தர்களே. கர்மயோகி என்றால் யார்? கர்மங்களைச் செய்பவன். கர்மம் என்றால் அது மனதினால், வாக்கினால், உடலால் செய்யப்படுவதாகும். சரி, பக்தியோகி என்று ஒருவர் இருக்கிறார் என்றால், அவர் என்ன செய்கிறார்? அவர் பூஜை செய்கிறார் என்றால், அது காயிக கர்மம். அவர் பஜனை செய்கிறார் என்றால், அது வாசிக கர்மம். தியானம் செய்கிறார் என்றால், அது மாநஸ கர்மம். ஆதலால் தன் பக்தியின் வெளிப்பாடாக அவர் செய்வதனைத்துமே செயல்கள்தான். 'காயேந வாசா, மநஸா' - காயத்தினால், வாக்கினால், மனதினால் செய்யப்படும் கர்மங்களே

யோகம். தனக்கு அந்தக்கரண சுத்தி வேண்டும், மனப்பக்குவம் வேண்டும் என்ற எண்ணத்தோடு, பக்தியோடு செயல்கள் செய்யப் படும்போது அந்தக் கர்மங்களே கர்மயோகமாக மாறி விடுகின்றன.

பக்தி இல்லாத செயல் இல்லை, பக்தி இல்லாத தியானம் இல்லை, பக்தி இல்லாத ஸந்ந்யாஸம் இல்லை, பக்தி இல்லாத ஞானம் இல்லை என்பதால் பக்தி என்பது ஒரு தனி யோகம், ஒரு தனி வழி அல்ல. நீங்கள் பக்தி யோகம் செய்கிறீர்களா அல்லது வேறு யோகம் செய்கிறீர்களா என்று கேட்பது நீங்கள் மூச்சு விடுகிறீர்களா அல்லது உயிருடன் இருக்கிறீர்களா என்று கேட்பது போல் இருக்கிறது. இப்படிக் கேட்டால் என்ன பதில் சொல்வது? மூச்சு விடாமல் உயிருடன் எப்படி இருப்பது? அதேமாதிரி பக்தி இல்லாத கர்மமோ, ஞானமோ எப்படி இருக்க முடியும்?

ஆதலால் பக்தி யோகம் என்பது கர்மயோகத்தின் மற்றொரு பெயர்தான். சில சமயங்களில் அதை உபாஸனையைக் குறிக்கப் பயன்படுத்துவார்கள். உபாஸனை என்பது தியானம், அதாவது மனதினால் மட்டுமே செய்யப்படும் கர்மம். அதுவும் கர்மத்திலேயே அடங்கிவிடும். பகவான் கர்மயோகம், ஞானயோகம் என்று இரண்டு வாழ்க்கை முறைகளை மட்டுமே சொல்லி இருக்கிறார். ஒருவன் ஸந்ந்யாஸியாக இருக்கலாம் அல்லது கர்மயோகியாக இருக்கலாம். இருவருக்குமே ஞானம் வேண்டும். ஆனால் ஸந்ந்யாஸிக்கு வீடு வாசல், குடும்பம் என்றவை இல்லாததால் அதன் பொருட்டு செய்ய வேண்டியது எதுவும் இல்லாததால், ஞானத்திற்காக செலவழிக்க அதிக நேரம் கிடைக்கிறது.

உலகனைத்தையும் ஈச்வர புத்தியுடன் பார்ப்பது பக்தி

சாஸ்திரத்தில் வேதாந்தம் என்பது வேதத்தில் கடைசி பாகமாகும். அந்தக் கடைசி பாகத்தில் சொல்லப்படுகின்ற விஷயமும் வேதாந்தம் எனப்படும். வேதத்தின் அந்திம பாகமான வேதாந்தம் உபநிஷத் என்றும் கூறப்படும். நான்கு வேதங்களிலும் கடைசி பாகத்தில் உள்ள விஷயங்கள் சிஷ்யனுக்கும் குருவுக்கும் நடக்கும் ஸம்வாத, சம்பாஷணை ரூபத்தில் உள்ளன. இவ்வாறு குருவினால் சிஷ்யனுக்கு உபதேசிக்கப்படுகின்ற உபநிஷத்துகள் பல உள்ளன. அவற்றில் பத்து உபநிஷத்துகள் முக்கியமாகக் கற்பிக்கப் படுகின்றன.

ஈஶ-கேந-கட$_{2}$-ப்ரஶ்ந-முண்**ட**$_{3}$-மாண்**டூ**$_{3}$க்ய-தித்திரி:
ஐத்ரேயம் ச சா$_{2}$ந்**தோ**$_{3}$**க்**$_{3}$யம் ச **ப்**$_{3}$**ரு**ஹ**தா**$_{3}$ரண்யகம் ததா$_{2}$

ஈசாவாஸ்ய, கேந, கட, ப்ரச்ன, முண்டக, மாண்டூக்ய, தைத்திரீய, ஐத்ரேய, சாந்தோக்ய, ப்ருஹதாரண்யக என்றும்

முக்கியமாக 10 உபநிஷத்துகள் கூறப்படுகின்றன. இவற்றை நாம் புத்தகம் படிப்பதுபோல் படிக்கக்கூடாது, குருமுகமாகத்தான் பாடம் கேட்க வேண்டும்.

ஈசாவாஸ்யம் என்ற உபநிஷத்தின் முதல் மந்த்ரம் ஈசாவாஸ்யம் என்ற சொல்லுடன் துவங்குவதால் இது இவ்வாறான பெயரை உடையது. இந்த உபநிஷத்தின் முதல் மந்த்ரம் இவ்வாறு உள்ளது.

ஈஶாவாஸ்யமித$_3$ம் ஸர்வம் யத் கிஞ்ச ஜக$_3$த்யாம் ஜக$_3$த் ।
தேந த்யக்தேந பு$_4$ஞ்ஜீதா$_2$ மா க்$_3$**ரு**த$_4$: கஸ்யஸ்வித்$_3$ த$_4$நம் ॥

இந்த மந்திரம் மிக ஆழமான பொருளுடையது. ஈஶாவாஸ்யம் – உலகத்தில் உள்ள எல்லா பொருள்களும் ஈச்வரனால் மூடப் பட்டுள்ளன. இதைத் தெரிந்து கொள்ள வேண்டும். அதாவது எல்லா பொருள்களையும் ஈச்வர ஸ்வரூபமாக, ஈச்வர புத்தியுடன் பார்ப்பாயாக என்று அர்த்தம். இங்கு ஆகாசம் இருக்கிறது. பொதுவாக அதை நாம் ஆகாசமாகத்தான் பார்க்கிறோமே அன்றி ஈச்வர புத்தியுடன் பார்ப்பதில்லை. இப்படி ஈச்வர புத்தியுடன் பார்க்கும்போது நம் பார்வையே மாறிவிடுகிறது.

ஒரு தங்கச் சங்கிலியைப் பார்க்கும்போது நாம் சங்கிலியை மட்டும் பார்ப்பதில்லை. அதில் தங்கத்தையும் பார்க்கிறோம். இது தங்கம்தானா, தங்கத்தில் எடை இருக்கிறதா என்றெல்லாம் பார்க்கிறோம். அதே மாதிரி ஒரு சட்டையைப் பார்க்கும்போது இது காட்டன், இது ஸில்க், இது பாலியெஸ்டர் என்ற புத்தியுடன்தானே பார்க்கிறோம். இங்கு இரண்டு விஷயங்கள் இருக்கின்றன. ஒன்று துணி, மற்றொன்று சட்டை. சட்டை துணியாக இருக்கிறது. துணி சட்டை அல்ல. அதனால் சட்டையைப் பார்க்கும்போது நாம் சட்டையை மட்டும் பார்க்கலாம், அல்லது துணியுடன் சேர்த்துப் பார்க்கலாம். நாம் துணியுடன் சேர்த்துதான் பார்க்கிறோம்.

அலை என்று சொல்லும்போதோ, சமுத்ரம் என்று சொல்லும் போதோ, குளம், குட்டை என்னும்போதோ தண்ணீரை விட்டுவிட்டு இவற்றை மட்டும் பார்க்க முடியாது. தண்ணீரையும் சேர்த்துதான் பார்க்கிறோம். அதேமாதிரி பானை என்னும்போதே இது மண்ணால் செய்யப்பட்ட பானை என்றுதான் பார்க்கிறோம். 'பானையை மட்டும் பாருங்கள், மண்ணைப் பார்க்காதீர்கள்' என்றால் முடியுமா? ஏனெனில் காரணத்தை நீக்கிவிட்டு கார்யத்தை மட்டும் எவ்வாறு பார்ப்பது?

உபநிஷத்துகள் இறைவனை இந்த உலகனைத்திற்கும் நிமித்த காரணமாகவும், உபாதான காரணமாகவும் அதாவது அறிவு

பூர்வமான காரணமாகவும், மூலப்பொருள் காரணமாகவும் காட்டுகின்றன. காரணமே கார்யரூபமாக வெளிப்படுகிறது என்பதால், எல்லாமே ஈச்வரன்தான். ஆதலால் எல்லாவற்றையும் ஈச்வர புத்தியுடன், அதாவது அனைத்துமே ஈச்வரனின் வெளிப்பாடுதான் என்று பார்க்க வேண்டும். நம்முடைய தேகமும், மனமும், புத்தியும், ஞானமும் ஈச்வரன்தான் என்று பார்க்க வேண்டும். அப்படிப் பார்க்கக்கூடிய சக்தி நமக்கு இருக்கிறது. அதுதான் உண்மை. அந்த உண்மையை வைத்துதான் இந்த உபநிஷத்தின் முதல் வாக்கியம் உள்ளது. எல்லாமே ஈச்வரன் என்றால், நம்முடைய உடல், மனம், இந்த்ரியங்களும் அதில் அடக்கம். 'எல்லாம்' என்னும்போது மனிதன் தன்னைச் சேர்த்துக் கொள்ள மறந்துவிடுவான். நம்முடைய உடல், மனம், இந்த்ரியங்களும் ஈச்வரனில் அடக்கம் என்று பார்க்கும்போது நம் மனோபாவம் மாறுகிறது, மனம் பக்குவமடைகிறது. இதுதான் பக்தி, பக்திபாவம். இது இருக்கும்போது இதன் அடிப்படையில் நாம் சில கார்யங்களைச் செய்கிறோம்.

தர்மத்தை ஆண்டவன் ஸ்வரூபமாகக் காண்பதும் பக்தி

யத: ப்ரவ்**ருத்**திர்**பூ**$_4$தாநாம் யேந ஸர்வமித**ம்**$_3$ம் ததம் ।
ஸ்வகர்மணா தமப்$_4$யர்ச்ய ஸித்$_3$தி$_4$ம் விந்த$_3$தி மாநவ:।। (18-46)

'எவனிடமிருந்து உயிர்களின் உற்பத்தியோ, எவனால் இவ்வனைத்தும் வியாபிக்கப்பட்டிருக்கின்றனவோ, (எவனிடம் அனைத்தும் போய்ச் சேருமோ) அந்த ஆண்டவனை தன் கடமையால், நித்ய நைமித்திக கர்மங்களால் அர்ச்சித்து மனிதன் மேன்மையை அடைகிறான்.' என்று பகவான் கீதையின் 18-வது அத்யாயத்தில் கூறுகிறார்.

மேலும் லௌகிகம் என்று நாம் நினைக்கிறோமே, அதாவது பூஜையைத் தவிர சமையல் செய்வது, ஆஃபீஸ் போவது, சம்பாதிப்பது போன்று தினந்தோறும் நாம் செய்யும் எத்தனையோ கடமைகளும் பூஜைகளே. ஆண்டவனே தர்மஸ்வரூபமாக இருக்கிறார். பூமியின் ஆகர்ஷண சக்தி எல்லோராலும் அறியப்படுவதுபோல் தர்மம் என்பதும் எல்லோராலும் அறியப்படுவதாக இருக்கிறது.

நாம் ஆகர்ஷண சக்தியைப் பார்க்கிறோமா? இல்லையே. ஆனால் நாம் உட்கார்ந்துக் கொண்டு இருக்கிறோமே, அது போதும் ஆகர்ஷண சக்தி இருக்கிறது என்று ஊகிப்பதற்கு! அந்த சக்தி இல்லாவிடில் நாம் பறந்து கொண்டல்லவா இருப்போம்! ஆகர்ஷண சக்தி என்ற பெயர் தெரியாமல் இருக்கலாம். ஆனால் அந்த சக்தி

இருப்பதை எல்லோருமே அறிகிறார்கள். இதை அறியாவிட்டால் பறந்து விடுவோமோ என்ற பயத்தில் மனிதன் காலைத் தூக்குவதற்கே அஞ்சுவான். அதுபோல இது சரி, இது தப்பு என்ற நியதிகள், தர்மம், அதர்மம் என்ற நியதிகள் இருக்கின்றன என்பதை நாம் எல்லோரும் அறிகிறோம்.

எல்லோருக்கும் தெரிகிறது என்றால், அது சொல்லிக் கொடுக்காமலேயே தெரிய வேண்டும். சொல்லிக் கொடுக்காமலேயே தெரிய வேண்டும் என்றால், தெரிய வேண்டிய பொருள் இருக்க வேண்டும். அவ்வாறான பொருள் இருக்கிறது. அதுதான் தர்மம். 'ஈஶாவாஸ்யம் இத₃ம் ஸர்வம்.' – இருக்கின்ற பொருள் எல்லாமே இறைவன் என்று சொல்லும்போது, அந்த தர்மமும் இறைவனின் ஸ்வரூபம்தான்! தர்மத்தை வெறும் ஆண்டவனின் கட்டளையாக மட்டுமே பார்ப்பது, அதை மீறினால் நரகத்திற்குப் போவாய் என்ற பயமுறுத்தல் இவை எல்லாம் நம் மதத்திற்கு உகந்தவை அல்ல. இவை மிகவும் குழந்தைத்தனமான சிந்தனைகள்.

தர்மமே ஆண்டவனின் ஸ்வரூபம். தர்மத்தையே இறைவனின் ஸ்வரூபமாக பார்ப்பது என்பது, எல்லா மதங்களுக்குமே உகந்ததாக இருக்கும். அப்பொழுது எந்த உருவத்திலும், எந்த விதத்திலும் ஆண்டவனை வழிபடலாம் என்பது தெளிவாகும். மேலும், மோக்ஷம் என்பதன் பொருளும் மாறிவிடும். எல்லாமே ஆண்டவன்தான் என்றால், அங்கு போவது, இங்கு போவது என்பதுதான் மோக்ஷம் என்ற சிந்தனை மாறிவிடும். இங்கேயே சுதந்திரமாக இருப்பதுதான் மோக்ஷம் என்பது தெளிவாகும். 'இவ்வுடலை விட்டு இவ்வுலகை விட்டுப் போவதுதான் மோக்ஷம்' என்றால்தான் பயம். அங்கே போனால் இங்கு இருப்பது போய்விடும். இங்கே இருந்தால் அங்கு இருப்பது கிடைக்காது. பூர்ணமாக இருப்பதுதான் மோக்ஷம். பூர்ணம் என்றால் எங்கும் எப்பொழுதும் இருப்பது. அந்த பூர்ண வஸ்துவே நான் என்று அறிந்துகொள்வதே மோக்ஷம்!

தர்மம் என்பது ஆண்டவனுடைய ஸ்வரூபம் என்பதால், நாம் எந்தக் கார்யம் செய்ய வேண்டுமோ, அதுதான் நம் ஸ்வகர்மம் – கடமை. இந்த இடத்தில் இதுதான் சரி, இதுதான் என்னால் செய்யப்பட வேண்டியது என்பதுதான் ஸ்வகர்மம். 'சரி' என்பதே ஆண்டவன்தான்.

வீட்டில் நெருப்பு பிடித்துக்கொண்டது. அதை அணைக்க வேண்டும். இவர் இருக்கும் பெட்ரோல், டீஸல் எல்லாவற்றையும் எடுத்து ஊற்றுகிறார். 'ஏனய்யா இதை ஊற்றுகிறீர்கள்?' என்றால், 'தண்ணீர் இல்லை, அதனால் இதை ஊற்றுகிறேன்' என்கிறார்.

'தண்ணீர் இல்லை, சரிதான் அதற்காக ஏன் பெட்ரோலை ஊற்ற வேண்டும்?' 'இதுகூட உங்களுக்குத் தெரிய வில்லையே. தண்ணீர் எங்கிருந்து வருகிறது? பூமிக்கடியிலிருந்து. பெட்ரோல் எங்கிருந்து வருகிறது? பூமிக்கடியிலிருந்து. அதனால் இரண்டும் ஒன்றுதான்' என்கிறார்.

அவரை என்ன செய்வது? இரண்டும் பூமிக்கடியிலிருந்துதான் வருகின்றன என்றாலும், பெட்ரோலை ஊற்றினால் நெருப்பு இன்னும் கொழுந்து விட்டு எரியும், தண்ணீரை ஊற்றினால் நெருப்பு அணையும் என்ற நியதிதான் ஆண்டவன். இந்த நியதியுடன் சேர்ந்து வாழ்ந்தால் நாம் பிழைத்துக் கொள்வோம், இல்லாவிடில் நாசம் அடைவோம். அம்மாதிரியே 'தண்ணீர்தானே நெருப்பை அணைக்கிறது; அதனால் தண்ணீர்தான் முக்கியம். தண்ணீரைப் போட்டு வண்டியை ஓட்டு' என்றால் அதுவும் சரியல்ல. அங்குள்ள நியதி வேறு.

எது எங்கு உசிதமோ, அதைச் செய்தால் நாம் ஆண்டவனுடன் இணங்கி இருக்கிறோம். ஏனெனில் அதுதான் ஆண்டவன். 'ஸ்வகர்மணா தம் அப்யர்ச்ய' – கடமை உணர்வுடன் எது உசிதமோ அதைச் செய்ய வேண்டும். வெறும் கடமை உணர்வு மட்டும் போதாது. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்று சொல்லலாம். இறை உணர்வு இல்லாமல், பக்தி இல்லாமல் இவை நிலைத்து நிற்க மாட்டா. ஆனால், தர்மம்தான் ஈச்வரன் என்னும்போது நம் பார்வையும், பாவமும் மாறுகின்றன. அப்பொழுது தர்மத்தைப் பின்பற்றி நடப்பது எளிதாகிறது. தர்மமே ஈச்வரன் என்ற உணர்வு இல்லாவிடில் கடமையைச் செய்ய நம்மை நாமே வற்புறுத்திக் கொள்ள வேண்டும்; அதாவது கடமையை கடனே என்று வேண்டாவெறுப்பாக, நிர்பந்தமாகச் செய்வோம். மாறாக ஈச்வர உணர்வு இருந்தால், கடமை செய்வது எளிதாகிறது, சகஜமாகிறது.

'தர்மத்தைத் தவிர வேறேதும் என்னால் செய்ய முடியாது, தர்மம் செய்வதில் எனக்கு எந்த நிர்பந்தமும் தேவை இல்லை, தர்ம வழி நடப்பது என் இயல்பு, அதைப் பின்பற்றுவதில்தான் எனக்கு ஆனந்தம்' என்ற நிலைதான் மனப் பக்குவமாகும்!

அஹங்காரம் அடங்கினால்தான் மனப்பக்குவம் வரும்

இந்தப் பக்குவமானது அஹங்காரம் இருக்கும்வரை வராது. எல்லாமே ஆண்டவன் என்றால், நம்முடைய அஹங்காரம் தனித்து நிற்காமல் ஆண்டவனிடம் அடங்கிவிடும். அப்படி அடங்கும்போது ஒருவனுக்கு அந்தக்கரணசுத்தி ஏற்படுகிறது. 'ஸி**த்**$_3$**தி**$_4$ம் வி**ந்த**தி

மாநவ:' – மனிதன் ஸித்தியை அடைகிறான். ஸித்தியை அடைகிறான் என்றால், இறந்து போகிறான் என்றும் அர்த்தமல்ல, விசேஷ சக்திகளை அடைகிறான் என்றும் அர்த்தமல்ல. எதை அடைய வேண்டுமோ அதை அடைகிறான். வாழ்க்கையில் எதைத் தேடுகிறானோ அதை அடைகிறான்; ஆனந்தத்தை, பூர்ணத்வத்தை, நிறைவை அடைகிறான். முதலில் அந்தக்கரண சுத்தியை அடைந்து, பிறகு ஞானத்தை அடைந்து, பிறகு தான்தான் பூர்ணன் என்ற உணர்வை, நிலையை அடைகிறான். இவ்வாறு பக்திபூர்வமாகச் செய்யப்படும் கர்மங்கள் அனைத்துமே யோகமாக மாறிவிடுகின்றன. ஆசைகளைப் பூர்த்தி செய்வதற்கும் பக்தி வேண்டும்!

முடிவுரை

பக்தி என்பது ஆண்டவனிடம் நமக்கு இருக்கும் மனோபாவம். அந்த பக்தியானது செயல்களில் வெளிப்படும் போதுதான் பலனளிக்கிறது. பக்தி பூர்வமான செயல்களின்மூலம் நாம் ஆண்டவனிடம் சரணடைந்து நம் அஹங்காரத்தை நீக்குகிறோம், மனத்தூய்மையையும் பக்குவத்தையும் பெறுகிறோம். அத்துடன் அத்ருஷ்டம் என்னும் புண்யத்தின் மூலம் நம் பழைய பாபங்களின் தாக்கத்தை நீக்குகிறோம், அதன்மூலம் நம்மை துக்கத்திலிருந்து விடுவித்துக் கொள்கிறோம். வேண்டியதைப் பெறுவதற்கும் அந்த அத்ருஷ்ட புண்யம் பயன்படுகிறது. பக்தி என்பது உலகனைத்தையும் ஈச்வர புத்தியுடன் பார்க்கும் பக்குவத்தையும், தர்ம வழியில் நடக்கும் புத்தியையும் தந்து, பிறகு ஆண்டவனின் ஸ்வரூபத்தையே அறியும் ஆவலையும், ஞானத்தையும் தந்து அதன்மூலம் நிறைவு பெறுகிறது.

இவ்வாறு பக்தி என்பதன் பொருளை இந்த மூன்று நாட்களில் எவ்வளவு பார்க்க முடியுமோ அவ்வளவு பார்த்தோம். இவை அனைத்தும் வீடுதோறும் கீதோபதேசம் என்ற கீதை விளக்க உரையில் விஸ்தாரமாகக் கூறப்பட்டுள்ளன. இன்னும் அறிந்து கொள்ள நிறைய இருக்கிறது. அதன் பொருட்டு மேலும் மேலும் கேட்க வேண்டும், மேலும்மேலும் படிக்க வேண்டும்.

ஓம் ஶாந்தி: ஶாந்தி: ஶாந்தி:



பிரார்த்தனை பற்றித் தெரிந்துகொள்வோம்

பிரார்த்தனை

பிராத்தனை என்பது என்ன? அது ஒரு குறிப்பிட்ட மனோபாவம். பிராத்தனை என்பதில் பிரார்த்தனை செய்பவர் ஒருவர் இருக்கிறார். பிரார்த்தனை ஸமர்ப்பிக்கப்படும் இடம் ஒன்று உள்ளது. பிரார்த்தனை செய்யும் வழிமுறை ஒன்று உள்ளது இது மனிதருக்கு மனிதர் மாறுபடலாம்.

பிரார்த்தனையை ஒருவர் எளிய முறையில் செய்யலாம், அல்லது மிகவும் சாஸ்த்ர ஸம்ப்ரதாய முறைப்படி விரிவான சடங்குகளாகவும் செய்யலாம். அல்லது வாக்கினால் மட்டுமோ, மானஸீகமாகவோ செய்யலாம். ரமண மஹர்ஷி தன்னுடைய உபதேச ஸாரம் என்னும் நூலில் இதைக் குறிப்பிடுகிறார். முக்கியமாக சரீரத்தினால் செய்யப்படுவது காயிகம் எனப்படும். வார்த்தைகளினால் செய்யப்படுவது வாசிகம் எனப்படும். மனதினால் மட்டுமே செய்யப்படுவது மானஸம் எனப்படும். சடங்குகள், பூஜைகள் காயிக வழிபாடு ஆகும். பஜனை செய்வது, ஸ்தோத்ரம், பாராயணம் முதலியவை வாசிக வழிபாடு ஆகும். மனதினால் மட்டுமே மந்த்ரத்தை ஜபிப்பது போன்றவை மானஸ வழிபாடு ஆகும். பிரார்த்தனைச் செய்யத் தெரியாவிடினும், இறைவா எனக்குப் பிரார்த்தனைச் செய்யத் தெரியவில்லை. அதைச் செய்யும் வழியை எனக்குக் காட்டுங்கள் என்றும் பிரார்த்தனை செய்யலாம்.

பிரார்த்தனையின் குறிக்கோள்

எல்லாச் செயல்களுக்கும் ஒரு நோக்கம் இருப்பதுபோல் பிரார்த்தனை – வழிபாடு என்பதற்கும் ஒரு நோக்கம் உள்ளது. நோக்கம் இல்லாமல் பிரார்த்தனை இல்லை. விரும்பிய பொருளை அடைவதற்காகப் பிரார்த்தனை செய்யலாம். அல்லது சித்தசுத்தியை, மனத்தெளிவைப் பெறும் பொருட்டும் செய்யலாம். 'ஈச்வரா, என்னுடைய பிரார்த்தனையால் நீ ப்ரீதி அடைய வேண்டும்' என்றும் ஒருவர் பிரார்த்திக்கலாம்; ஏனெனில் இறைவனின் பார்வை தன்மீது விழ வேண்டும் என்று இவர் நினைக்கிறார். இறைவனின் பார்வை எப்பொழுதும் மற்றவர்களின் மீதே விழுவதுபோலும், தன்னிடம்

வரும்போது அவர் கண்ணை இமைத்து விடுகிறார் அல்லது மூடிக்கொண்டு விடுகிறார் என்பது இவருடைய எண்ணம்.

ஒவ்வொருவரும் தங்களுடைய பசி அடங்க வேண்டும் என்றால் அவரவர்கள்தானே சாப்பிட வேண்டும்! மற்றவர்கள் பசி அடங்குவதற்கு நாம் சாப்பிட முடியாது அல்லவா? அவ்வாறே மற்றவர்களுக்காக நாம் பிரார்த்தனையும் செய்ய முடியாது என்று சிலர் நினைக்கிறார்கள். இது தவறு. பிரார்த்தனை ஒரு செயலாக இருக்கலாம். ஆனால் அது சாப்பிடுவது போன்ற செயல் அல்ல; மற்றவர்களுக்காக நாம் சாப்பிட முடியாது. ஆனால் மற்றவர்களுக்காக நாம் தட்டைக் கழுவலாம், துணி துவைக்கலாம். அவ்வாறே நாம் நமக்காக வேண்டியும் பிரார்த்தனை செய்யலாம், மற்றவர்களுக்காக வேண்டியும் பிரார்த்தனை செய்யலாம். மற்றவர்களுக்காக நாம் பிரார்த்தனை செய்கிறோம் என்றாலும், அது நம்முடைய பிரார்த்தனையே ஆகும்.

மற்றவர்கள் சந்தோஷமற்று இருக்கும்போது, துக்கப் படும்போது, துன்பத்தால் தவிக்கும்போது நாமும் வருந்துகிறோம்; ஏனெனில் நாம் மனிதர்கள், இது மனிதப் பண்பாடு. மற்றவர்களுடைய துக்கம் நம்மைத் தொற்றிக் கொள்ளும்போது அவர்கள் துக்கம் தீர வேண்டும், அவர்கள் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்று பிரார்த்தனை செய்கிறோம். இது மற்றவர்களுக்காக என்றாலும், உண்மையில் அவர்கள் சந்தோஷமடைவதால் நாம் சந்தோஷம் அடைவோம் என்பதால், இதுவும் நம் பொருட்டான பிரார்த்தனையே.

ஆதலால் எல்லா பிரார்த்தனைகளும் நம் பொருட்டே ஆகும். என்னுடைய துணைவர், குழந்தைகள், என்னுடைய குடும்பம் நன்றாக இருக்க வேண்டும் என்று நாம் பிரார்த்தனை செய்யும்போது அதுவும் நமக்காகவே; ஏனெனில் நான் என்பது குடும்பத்தையும் சேர்த்துக் கொண்டதாக விரிவடைந்துள்ளது.

போரிலோ, அல்லது விமானம் கடத்திச் செல்லப்படும் போதோ ஒருவர் பிணைக்கைதியாக, *hostage*-ஆக கைது செய்யப் படுகிறார். அதனால் நாம் பாதிக்கப்படுவதற்கு அவர் இந்தியராகத்தான் இருக்க வேண்டும் என்பதில்லையே. ஏனெனில் அவருக்கு ஏற்படக்கூடிய துன்பங்களை எல்லா மனிதர்களும் ஊகிக்கலாம். பிறருடைய துக்கத்தினால் நாம் பாதிக்கப்படும்போது அவர்களுக்காகப் பிரார்த்தனை செய்யும்போது அதனால் நம் துக்கமும் போகிறது என்பதால் அந்தப் பிரார்த்தனையும் நம் பொருட்டுதான்.

பிரார்த்தனை எப்பொழுதும் பலனுள்ளது

பிரார்த்தனையின் அழகை நாம் காண வேண்டும். பிரார்த்தனை உணர்வில்லாத சடங்கோ, தியானமோ இல்லை. பிரார்த்தனைக்கு மாற்றான அல்லது ஈடான அணுகுமுறை வேறு இல்லை. மற்ற அணுகுமுறைகளில் நம் அஹங்காரம் தலைதூக்கி நிற்கிறது. ஆனால் இங்கோ நம் அஹங்காரம் தன்னையே முழு விருப்பத்தோடு இறைவனிடம் பலியிட்டுக்கொள்கிறது. இந்த பலி, இந்த அர்ப்பணிப்பு பெரிய அற்புதத்தை நிகழ்த்துகிறது.

நம் பொருட்டோ அல்லது பிறர் பொருட்டோ, எல்லா பிரார்த்தனைகளுமே பயனுள்ளவை. இதில் பண்டிதனின் பிரார்த்தனை, பாமரனின் பிரார்த்தனை என்ற வேறுபாடு கிடையாது. ஏனெனில், அனைத்துமே ஆண்டவனை நோக்கிச் செய்யப் படுபவவை. ஒரு பாமரத் தாயே தன் குழந்தையின் மழலையைப் புரிந்து கொள்வதில்லையா? ஆண்டவன் அனைத்தையும் அறிபவர் என்றால், எவ்விதமாகப் பிரார்த்தனை செய்தாலும் அதை ஏற்றுக் கொள்வார்; எந்த மொழியில் பிரார்த்தனை செய்தாலும் அதைப் புரிந்து கொள்வார். பிரார்த்தனையின் பயன் என்ன, பிரார்த்தனை எவ்வாறு பலனை விளைவிக்கிறது என்று அறிந்து கொள்வதற்கு பிரார்த்தனையின் தன்மையை நாம் காண வேண்டும்.

பிரார்த்தனையின் கண்கூடான பலன்

பிரார்த்தனையின் ஒரு பலன் த்ருஷ்ட பலன், அதாவது உடனடியானது. மனத்தூய்மை, மனத்தெளிவு இவற்றுக்காகப் பிரார்த்தனை செய்யும்போது, நம்மைவிட உயர்ந்த சக்தி ஒன்று உள்ளது என்பதை நாம் ஒப்புக்கொள்கிறோம். அத்துடன் நம் இயலாமையையும், நம்முடைய அறிவு, சக்தி இவை ஓர் எல்லைக்கு உட்பட்டவை என்பதையும் ஒப்புக்கொள்கிறோம். இது யதார்த்தை, நடைமுறை உண்மையை ஒப்புக்கொள்ளலாகும். ஆனால் பொதுவாக நம்முடைய வரையறைகளைக் காணவோ, ஒப்புக்கொள்ளவோ நாம் மறுக்கிறோம்; அதன்மூலம் நாம் உண்மையை சந்திக்க, ஏற்றுக் கொள்ள மறுக்கிறோம்.

ஆதலால், நம்மால் பிரார்த்தனை செய்ய முடிகிறது என்பது ஒரு பெரிய விஷயம்; ஏனெனில் அங்கு நாம் நம்முடைய இயலாமையை உணர்ந்து, நம்மைவிட உயர்ந்த ஓர் அளவற்ற சக்தி இருப்பதை ஏற்றுக் கொள்கிறோம். இந்த உணர்வு மிகவும் அழகான ஓர் உணர்வு. இந்த உணர்வே நம் மனதில் ஓர் அமைதியை உண்டு

பண்ணும். இதுவே பிரார்த்தனையின் கண்கூடான, உடனடியான பலனாகும். இது உளரீதியான மாற்றம் என்று சொல்லலாம். ஆனாலும் இந்த மாற்றம் உடனடியான பலன், த்ருஷ்ட பலன் என்பதை மறுப்பதற்கில்லை. ஓரிடத்தில் அமர்ந்து பிரார்த்தனை செய்வது என்பது எளிதல்ல. ஏனெனில் நம்முடைய ஆணவம், அஹங்காரம் நம்மைப் பிரார்த்தனை செய்ய விடுவதில்லை. அப்படியும் நாம் அமர்ந்து பிரார்த்தனை செய்கிறோம் என்னும்போது நம்முடைய மனதில் ஒரு நெகிழ்வு ஏற்படுகிறது.

பிரார்த்தனையின் அத்ருஷ்ட பலன்

பிரார்த்தனையின் மற்றொரு பலன் அத்ருஷ்ட பலனாகும். இங்கு நம் நம்பிக்கை செயல்படுகிறது. பிரார்த்தனை செய்பவர் 'இந்தப் பலன் எனக்கு வேண்டும்' என்று சொல்லிப் பிரார்த்தனை செய்கிறார். அவருடைய ஸங்கல்பமும் அதாவது விருப்பமும், அவருடைய செயலும் சேர்ந்து ஒரு ஸூக்ஷ்மமான, கண்ணுக்குத் தெரியாத பலனை உண்டுபண்ணுகின்றன. இது கண்ணுக்குத் தெரியாதது என்பதால் அத்ருஷ்டம் எனப்படும். இது காலப் போக்கில் நல்ல பலனாக, ஸாதகமான பலனாக வெளிப்படுகிறது. இதைத்தான் நாம் இறைவனின் அநுக்ரஹம், அருள் என்று கூறுகிறோம். இது பிரார்த்தனை என்னும் செயலால் விளைகிறது, செய்பவரின் கணக்கில் வைக்கப்படுகிறது.

பிரார்த்தனை என்பது முகப்புகழ்ச்சி ஆகாதா?

ஒரு மனிதரை நாம் புகழும்போது அதில் எப்பொழுதுமே ஓரளவு முகஸ்துதி, மிகைப்படுத்துதல் உள்ளது. ஆனால் ஒருவருடைய குணாதிசயங்களுக்கு எல்லையே இல்லை என்னும்போது அவரைப் புகழ்வது எவ்வாறு மிகைப்படுத்தலாகும்? பகவானைப் பற்றி நாம் என்ன கூறினாலும் அது மிகை ஆகாது என்பது மட்டுமல்ல; அவரிடம் இருப்பதைவிட நாம் கூறுவது மிக, மிகக் குறைவானதாகும்.

நம்முடையோ அறிவோ குறைவு. அவரோ எல்லாம் அறிபவர், எல்லாம் வல்லவர். அந்த 'எல்லாம்' என்பதில் அடங்கியுள்ளது என்ன என்பதே நமக்குத் தெரியாது. அப்படி இருக்கும்போது அவரைப் பற்றி நாம் எதைக் கூறினாலும் அது அந்த 'எல்லாம்' என்பதில் அடங்கி விடுவதால் அது மிகையாகாது! மேலும், பூரண ஸ்வரூபரான அவருக்கு நம்முடைய முகப்புகழ்ச்சியால் ஆக வேண்டியது ஒன்றும் இல்லை.

இறைவன் எல்லாம் அறிபவர், எல்லாம் வல்லவர் அதாவது ஸர்வஜ்ஞர், ஸர்வ சக்திமான் என்பதை அவர் அறியாதது எதுவும் இல்லை, அவரால் முடியாததேதுவும் இல்லை என்ற விதத்தில்தான் நாம் புரிந்துகொள்ள முடியும். இவ்வாறு உணர்ந்து அவரைப் புகழும்போது, அதில் ஒரு மனமுதிர்ச்சியும், ஆனந்தமும் ஏற்படுகிறது. ஏனெனில் அவர் ஆனந்தஸ்வரூபர், ஆனந்தத்தை அளிப்பவர்.

அஹங்கார, மமகாரங்கள்

அஹங்காரம், மமகாரம் இரண்டுமே, அதாவது நான் என்ற உணர்வும், என்னுடைய என்ற உணர்வும் ஒன்றையொன்று வலுப்படுத்துகின்றன. இவை என்னுடையவை என்று சொல்லாமல் நான் என்ற உணர்வு தாக்கு பிடிக்காது. ஆனால் சிறிது ஆராய்ந்து பார்த்தாலும் என்னுடையது என்று கூறுவதற்கு ஒன்றுமே இல்லை என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

மனப்பக்குவமுள்ளவன் அனைத்தையும் இறைவனுடைய உடமையாகப் பார்க்கிறான். தன்னிடம் இருக்கும் சில விஷயங்களுக்குத் தன்னை டிரஸ்டியாகப் பார்க்கிறான். ஆதலால், தன்னிடம் இருப்பதையெல்லாம் நான்தான் சாதித்தேன் என்ற அஹந்தை அவனுக்கு இல்லை. அத்தகைய அஹந்தை அறியாமையில்தான் தன் மூலத்தைக் கொண்டது.

இத்தகையவன் தன் விவேகத்தினால் மனப்பக்குவம் அடைகிறான். இறைவனின் நியதிகளின்படி எது வருமோ அது வந்தே தீரும் என்ற அறிவை அடைகிறான். ஆதலால், செய்ய வேண்டியவற்றைச் செய்கிறான். மன இறுக்கம், கவலை இன்றி வருவதை எதிர்கொள்ளத் தயாராக இருக்கிறான். தன்னிடம் நம்பிக்கை கொள்கிறான், இறைவனிடமும், இறைவனுடைய நியதிகளிலும் நம்பிக்கை கொள்கிறான். ஆதலால், தன் பாதுகாப்பு பற்றிய பயத்தை பெருமளவு நீக்கி விடுகிறான். இதுவே மனதில் ஒரு சுதந்திர உணர்வைத் தருகிறது.

கர்மயோகியும் இவனே, பக்தனும் இவனே! இவனுக்கு நான் என்ற உணர்வு, அஹங்காரம் இருக்கிறது. ஆனால் அது பக்குவம் உள்ள அஹங்காரம். நாளடைவில் ஞானத்தினால் இது எளிதாக, முழுமையாக நீங்கிவிடும்.

அஹங்காரத்தை பலியிடுதல்

இறைவனே அனைத்துக்கும் காரணம், பிரம்மா, இந்த்ரன் முதலிய தேவர்களுக்கும் ஆதாரமானவர் என்னும்போது, அவருடைய மஹிமைகளை அறிபவர்கள் அவரிடம் சரண் அடைகிறார்கள் என்பதில் ஆச்சர்யம் இல்லை. அவரே முடிவான புகலிடம். தன்னுடைய ஸாதனைகள் உட்பட எல்லா மஹிமைகளும் அவருடைய விபூதிகளே என்று உணரும்போது மனிதன் உள்ளதை உள்ளபடிக் காணும் பக்குவத்தையும், வைராக்யத்தையும் அதாவது பற்றின்மையையும் அடைகிறான். அஹங்காரம் உள்ளது என்றாலும், அது நலிவடைந்த அஹங்காரம். ஆதலால் அது அவனுக்கும் இந்த உலகத்திற்கும் இடையே உள்ள இணக்கத்தை எவ்விதத்திலும் பாதிப்பதில்லை. ஏனெனில் இந்த உலகமும் இறைவனின் விபூதியே, மகிமையின் வெளிப்பாடே!

நான் எல்லாவற்றிலும் ஸமமாக இருக்கிறேன் என்னும் கீதையின் வாக்யங்களின் மூலம் ஜீவனும் இறைவனும் ஒன்றே என்னும் ஞானத்தைப் பெறும்போது இருப்பதெல்லாம் இறைவன் மட்டுமே என்ற அறிவு ஏற்படுகிறது. அதனால் அஹங்காரம் முழுவதாக நீங்குகிறது. அஹங்காரத்தின் நீங்குதலே சரணடைதல் என்னும்போது, இங்கு ஞானமும் சரணடைதலும் ஒன்றாகின்றன.

இறைவனின் அருளை நாடுதல் என்பது அறிவுடமை

நாம் இறைவனின் அருளை, அநுக்ரஹத்தை நாடுகிறோம் என்றால், நம் வாழ்விற்கு நாம் பொறுப்பு ஏற்கிறோம் என்று பொருள். நாம் செய்ய வேண்டியவற்றைப் பொறுப்புடன் செய்கிறோம். அதற்கேற்ற பலன் இறைவனால் கொடுக்கப்பட்டுத் தானாக வரும்.

நம் உடல் நலமாக இல்லை என்றால் நாம்தான் டாக்டரை நாடிப் போகிறோம். நாமே போக முடியாவிட்டால், யாரையாவது அழைத்துச் செல்லும்படிக் கேட்கிறோம். இவ்வாறு முயற்சி செய்வது புத்திசாலித்தனம். இறைவனுடைய அருளும் தானாக வராது. இது போல் நாம்தான் நாடிச் சென்று நம் முயற்சியால் பெற வேண்டும்.

பிரார்த்தனையில்தான் பூரண சுதந்திரம் வெளிப்படுகிறது

பிரார்த்தனையில் நம்முடைய will power-ஐ, விருப்பாற்றலை முழுமையாகப் பயன்படுத்துகிறோம். பிரார்த்தனையில்தான் தேர்ந்தெடுப்பதில் நமக்குள்ள சுதந்திரம் பூரணமாக வெளிப்படுகிறது.

பணம் தேடுவதை நாம் தேர்ந்தெடுக்கிறோம். அது உடனடியாகத் தரக்கூடிய பலன்களைப் பற்றிய அறிவு நமக்குத் தெளிவாக இருக்கிறது. இந்த அறிவு நம் தேர்வில் ஆதிக்கம் செலுத்துகிறது; அதாவது நம் விருப்பாற்றலை பாதிக்கின்றது. அவ்வாறே பதவி, புகழ், பெயர் முதலியவற்றைத் தேடும்போதும் அவை த்ருஷ்டபலன், கண்கூடான பலன் என்பதால் அவை நம் தேர்வை பாதிக்கின்றன. ஆனால் பிரார்த்தனையின் பயன் த்ருஷ்டம் அல்ல, உடனடியானது அல்ல. ஆண்டவன் இருக்கிறார் என்பதும், நம் பிரார்த்தனையைக் அவர் கேட்கிறார் என்பதும் கண்கூடானது அல்ல. ஆயினும் நாம் மனதாரப் பிரார்த்தனை செய்கிறோம். ஆதலால் பிரார்த்தனையில் தான் நம் சுதந்திரம் பூரணமாக, உயர்வாக வெளிப்படுகிறது.

நிவேதனம்

கடவுளிடம் சரணடைந்தால் கர்த்ருத்வம், அஹங்காரம் போய்விடாதா? – என்றால் நிச்சயம் போகாது; ஏனெனில் சரணடைபவர் கர்த்தா, செயல்படுபவர். நான் செயல்படுபவன் என்று நினைக்கிறோமே அதுதான் அஹங்காரம். அஹங்காரத்தை நீக்குவது என்றால் நான் சரணடைபவன் என்ற உணர்வையே விட்டுவிட வேண்டும். அதை எப்படி விடுவது? வடநாட்டில் தீபாராதனை செய்யும்போது ஒரு பாட்டு பாடுவார்கள். அதில் 'தந், மந், தந் ஸப் குச் ஹை தேரா' – 'என்னுடைய உடல், மனம், பொருள் அனைத்தும் உனதே, அனைத்தும் உனதே' என்று பாடுவார்கள். 'பரவாயில்லை, இவர்கள் எல்லாவற்றையும் எனக்கு அர்ப்பணித்து விட்டார்கள்'' என்று கடவுள் நினைக்கிறார். ஆனால் மறுநாளும் இதே வரிகளைப் பாடுகிறார்கள். 'என்னடா இது, ஒருவேளை நேற்று பாடியதை மறந்து விட்டார்களோ!' என்று கடவுள் யோசிக்கிறார். மறுநாளும், அதற்கு மறுநாளும் என்று தினம்தோறும் இதே வரிகளைப் பாடுகிறார்கள். ஏனென்றால் அர்ப்பணிப்பவர் தன்னை, அதாவது 'நான் அர்ப்பணிப்பவன்' என்று எண்ணும் அஹங்காரத்தை அர்ப்பணிக்கவில்லை. அந்த அஹங்காரத்தை ஞானம் என்ற அக்னியின் மூலம்தான் நீக்க முடியும்.

அதனால்தான் அப்பாடலின் அடுத்த வரி, 'தந், மந், தந் ஸப் குச் ஹை தேரா' – என்னுடைய உடல், மனம், பொருள் அனைத்தும் உனதே, அனைத்தும் உனதே. தேரா துஜ் கோ அர்ப்பண், க்யா லாகே மேரா' – உன்னுடையதை உனக்கே அர்ப்பணிக்கிறேன். எனது என்று என்ன உள்ளது? – என்பது அர்த்தம் உள்ளதாகிறது.

நம் உடல் முதலான அனைத்துமே நமக்குக் கொடுத்தருளப் பட்டுள்ளன. நாம் வெறும் மானேஜிங்க் டிரஸ்டி, நிர்வாக அறங்காவலர் மட்டுமே. அறங்காவலர் என்றால் தன்னிடம் பாதுகாத்து வைப்பதற்காகக் கொடுக்கப்பட்டவற்றைப் பற்றி அவ்வப்பொழுது சொந்தக்காரனுக்கு அறிவிக்க வேண்டும். ஆதலால், ‘உன்னுடையதை உனக்கே அர்ப்பணிக்கிறேன். என்னுடையது என்று ஒன்றுமே இல்லை’ என்பதே நிவேதனம், அதுவே ஸமர்ப்பணம். இதுவே மனப்பக்குவத்தின் வெளிப்பாடு.

பக்தி என்பதன் உண்மையான பொருள்

வெறும் மந்த்ரங்களையும், துதிப்பாடல்களையும் கூறுவது மட்டுமே பக்தி என்று பலரும் நினைக்கிறார்கள். இவை யாவும் பக்தியில் அடங்கும் என்றாலும் பக்தி என்பது இதற்கும் மேம்பட்டது. இறைவனின் ஆட்சியையும், நியதிகளையும் நம் வாழ்க்கையின் ஒவ்வொரு கணத்திலும் துல்லியமாக உணர்வதே பக்தி; ஊனக் கண்ணால் ஒரு பொருளில் நாம் பார்க்கக் கூடியதைவிட அதிகம் பார்க்கக் கூடிய திறன் இருந்தால்தான் நம்மால் இறைவனை உணர முடியும். கண்ணால் காண்பவைகளும் இறைவனே; அவற்றின் பின் இயங்கும் நியதிகளும் இறைவனே; இதை உணர்ந்து செயல்படுவதே கர்மயோகம். ஆகவே எந்த ஒரு செயலின்மூலமாகவும் நாம் இறைவனுடன் நேரிடையாகவோ, மறைமுகமாகவோ தொடர்பு கொள்ளலாம்.

ஒரு நாடகத்தில் பல கதா பாத்திரங்கள் உள்ளன. ஒவ்வொரு பாத்திரமும் மற்ற பாத்திரங்களுடன் சேர்ந்து கதையின் அந்தந்த சந்தர்ப்ப, சூழ்நிலைகளுக்கு ஏற்ப வசனம் பேச வேண்டும்; ஏற்றவாறு நடிக்க வேண்டும். இம்மாதிரி, இந்த உலகம் எனும் படைப்பு ஒரு நாடக மேடை; அதில் நாம் ஒவ்வொருவரும் ஒரு கதாபாத்திரம். நாடகத்தில் ஒவ்வொரு பாத்திரத்திற்கும் உரிய வசனம் இருப்பது போன்று நமக்கும் சந்தர்ப்ப, சூழ்நிலைகளைப் பொருத்து கடமைகள் உண்டு. அந்தந்த சூழ்நிலையில் எந்தெந்தப் பணிகள் நம்மிடம் எதிர்பார்க்கப் படுகின்றனவோ அவைதாம் இந்த நாடகத்தில் நாம் ஏற்கும் பாத்திரத்தின் வசனம்; அதுவே நாம் ஆற்ற வேண்டிய கடமை. இவ்வாறுதான் கர்மம் என்னும் இறைவனின் நியதி வேலை செய்கிறது. இல்லாவிடில், நம்மை சில நேரங்களில் சில குறிப்பிட்ட சூழ்நிலைகளில் ஏன் காண்கிறோம்? ஏன் சில பணிகள் நம்மிடம் எதிர்பார்க்கப்பட வேண்டும்? இதுதான் கர்மத்தின் நியதி.

ஒவ்வொரு சூழ்நிலைக்கும் ஒரு காரணம் உண்டு; ஓர் அர்த்தம் உண்டு. எந்த ஒரு சூவ்நிலையும் தற்செயலாக நிகழ்வதில்லை. 'ஐந்ஸ்டீன்' (*Einstein*) *கூறுவது போன்று கடவுள் பகடைகள் உருட்டுவதில்லை. ஒருவேளை அப்படி அவர் உருட்டினாலும் ஸர்வஜ்ஞரான அவருக்கு எந்த எண்ணிக்கை விழவேண்டும், எந்த எண்ணிக்கை விழும் என்பது தெரியும். அவர் அப்படி அறியாவிட்டால் அவர் இறைவனே அல்ல; ஆதலால் இறைவனுக்கு பகடைகள் உருட்டி ஒற்றையா, இரட்டையா என்று பார்க்கவேண்டிய அவசியம் இல்லை. சிற்றறிவு படைத்த நமக்குத்தான் தற்செயல் என்பதெல்லாம். பேரறிவு படைத்த அவரது படைப்பில் 'தற்செயலானது' என்பதே கிடையாது; ஒவ்வொன்றும் இது இப்படித்தான் நடக்க வேண்டும், வேறுமாதிரி நடக்க முடியாது என்ற ஒழுங்குடன் நடக்கிறது. இதைப் புரிந்து கொண்டால் நம்மைச் சுற்றி அமையும் சந்திப்புகள், உறவுகள், சூழ்நிலைகள், நிகழ்ச்சிகள் அனைத்துமே அர்த்தமுள்ளதாகின்றன.*

ஒவ்வொரு கணமும் நாம் ஆற்ற வேண்டிய கடமைகளை ஆற்றுவதன் மூலம் இறைவனை பூஜிக்கிறோம் என்பதை உணர்வதற்கு ஸாதாரணமான புத்தியைவிட அதிகம் காணும் ஆற்றல், அதாவது ஸூக்ஷ்மமான புத்தி வேண்டும். ஒரு செயலைச் செய்யும் உடலை மட்டும் காணாமல், அந்த உடலின் பின்னர் அவருடைய விருப்பு வெறுப்புகள் உள்ளன; அதன்பின் ஒருவிதமான எண்ணப் போக்கு உள்ளது, அதற்கும் காரணமாக ஒரு பின்னணி இருக்கிறது, இவற்றுக்குப் பின்னால் இறைவனின் நியதிகள் உள்ளன. இவ்வாறு நாம் நேரிடையாகக் காண முடியாவிட்டாலும், அனைத்திற்குப் பின்னும் காரண, கார்ய ரூபமாக இறைவனின் நியதிகள் உள்ளன என்பதை உணர்வதே பக்தி. இப்படி இறைவனைத் துல்யமாக உணர்ந்து செயல்படுவதே இறைவனுக்கான மறைமுகமான பூஜை; இதுவே யஜ்ஞம்!

உருவமும் மனோபாவமும்

எந்த மனோபாவமும் செயலாக உருவம் பெறும்போதுதான் பயனுள்ளதாகிறது, வலிமையும் பெறுகிறது. அவ்வாறே சடங்குகளும் அதற்குத் தகுந்த மனோபாவம் இருக்கும்போதுதான் அழகு பெறுகின்றன. தகுந்த மனோபாவமற்றச் செயல்கள் உயிரில்லாத சவம் போன்றவை. அவ்வாறே செயலுருவாக வெளிப்படாத மனோபாவம் உடலற்ற ஆவி போன்றது. A form without the spirit is like a dead body; and mere spirit without form is like a ghost. பக்தியை

வெளிப்படுத்துவதற்கு நம்முடைய கலாசாரத்தில் பலவிதமான அழகான உருவங்கள், சடங்குகள் உள்ளன.

இவ்வாறான சடங்குகளை பக்தி உணர்வு இல்லாமல் செய்தாலும் நாளடைவில் அந்த பக்தி உணர்வானது மெள்ள மெள்ள உண்டாகிவிடும். ஆங்கிலத்தில் *fake it and make it* – 'இருப்பது போல் பாவனை செய்து உண்டாக்கிக் கொள்' என்று சொல்லப்படுகிறது. ஆதலால்தான் சிறுவயது முதலே நம் கலாசாரத்தில் பெற்றோர்கள் குழந்தைகளை இவ்வாறான சடங்குகளில் ஈடுபடச் செய்கிறார்கள்.